விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 26 வியாழக்கிழமை (10.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 81

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

# யுத்த நிறுத்த காலத்தில் புலிகள் யுத்த விமானங்கள் கொள்வனவு

## கொழும்பை அழிக்கப் போகிறார்கள் என ஓலமிடுகிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

யுத்த நிறுத்தத்தை மீறியதை சர்வதேச நாடுகள் முன்னிலையில் விடுதலைப் புலிகள் ஒப்புக்கொள்ள வேண்டும். இது விடயம் பற்றி அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அறிவித்துள்ளோம் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டிக்குப் பணம் கொடுக்கும் உலக வங்கிக்கு அரசியல் எதற்கு

### எதிர்ப்புத் தெரிவித்து இன்று பேரணி

(கொழும்பு)

உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவித்தார் எனத் தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அது தொடர்பாக எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த எதிர்ப்புப் பேரணி இன்று கொழும்பில் நடைபெறவுள்ளதாக அவ்வியக்கத்தின் தலைவர் அல்லி குணவன்ச தேரர் தெரிவித்தார்.

உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதிக்குள்ள பணி வட்டிக்குக் கடன் வழங்குவது மட்டுமே. ஆகவே அவர் தனக்கு கொடுக்கப்பட்ட பணியினை மட்டும் செய்வது இரு சாராருக்குமே நல்லது.

வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் சிலர் இலங்கையின் அரசியலில் தலையிட வேண்டிய அவசியமில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே எமது இன்றைய எதிர்ப்புப் பேரணி இடம்பெறவுள்ளது என அவர் தெரிவித்தார். (சு-04)

## "உத்தியோக பூர்வமற்ற நிலை" வழங்க உலகவங்கிப் பிரதிநிதிக்கு என்ன அருகதை

### விமல் வீரவன்ச நாடாளுமன்றில் முழக்கம்

(கொழும்பு)

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்துக்களை மீளப்பெற வேண்டும் என்று ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

உலக வங்கியின் பிரதிநிதி கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியும் அதன் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையும் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இவ்விரண்டு கருத்துக்களுக்கும் பாரியளவில் வேறுபாடு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது விசேட உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார். இலங்கைக்குள் செயற்படும் எந்தவொரு அமைப்பிற்கும் இவ்வாறான கருத்தைத் தெரிவிக்கும் உரிமை இல்லை. பீற்றர் ஹரோல்ட் தனது கருத்தை மீளப்பெறாதுவிடின் அது பற்றி உலக வங்கிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமற்ற நிலை ஒன்றை வழங்குவதற்கு உலக வங்கி பிரதிநிதிக்கு இருக்கும் உரிமை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை அடிப்படையாகக்கொண்டே பீற்றர் ஹரோல்ட் இக்கருத்தை தெரிவித்துள்ளார் என்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தமானது (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களை குறிவைத்த துப்பாக்கிகள் நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

யாழ். இராணுவத்தினரால் கடந்த 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பயன்படுத்தப்பட்ட ஏழு துப்பாக்கிகள் யாழ். பொலிஸாரினால் யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத் துப்பாக்கிகளை வைத்திருந்த ஏழு இராணுவத்தினரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை வீதி மறியல் போர் நேற்று முடிவுக்கு வந்தது

(கல்முனை)

கல்முனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய வீதிமறியல் போராட்டம் நேற்று மாலையுடன் முடிவுக்கு வந்தது. கடந்த இரு தினங்களாக தடைப்பட்டுப்போயிருந்த மட்டக்களப்பு - கல்முனை வீதியில் நேரடிப் போக்குவரத்து சேவைகளும் வழமைக்கு திரும்பியுள்ளன.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபயரத்ன வீதிமறியல் போராட்டம் நடத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக தமிழ்ச்செல்வன் கொழும்பு சென்றார்

உலங்கு வானூர்தி கிளிநொச்சிக்கு வருகைதராததால் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாகச் சென்று பின்னர் உலங்கு வானூர்தியில் கொழும்பு செல்ல வேண்டியேற்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் கபடநோக்கங்களைத் தெளிவுபடுத்தவும், சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளின் புனர்நிர்மாணப் பணிகளுக்கான அவசியத் தேவைகளை வலியுறுத்துவதற்கும் விடுதலைப் புலிகளின் உயர் மட்டக்குழுவினர் நேற்று ஐரோப்பிய நாடுகளுக்கான தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று மாலை கிளிநொச்சியிலிருந்து ஏ-9 வீதி வழியாக ஓமந்தைச் சோதனைச்சாவடியைச் சென்றடைந்து அங்கிருந்து விசேட உலங்கு வானூர்தியின் மூலம் கொழும்புக்குச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரின் வெளிநாட்டு பயணங்களின் போது இலங்கை அரசு தனது விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியை கிளிநொச்சிக்கு அனுப்பிவைத்து உதவுவது வழக்கம். ஆயினும் இந்தப் பயணத்துக்காக நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை ஆணைக்குழுவின் முயற்சியால் பட்டதாரிகள் இருவருக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு வழங்கிய நியமனத்தின்போது, நியமனம் கிடைக்கத் தவறிய இருவருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முயற்சியால் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேணுகா கமலநாதன், திருநெல்வேலியைச் சேர்ந்த லோகேஸ்வரி சூரியகுமார் ஆகிய இரு பட்டதாரிகளுக்குமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓ.எல். பெறுபேறுகள் ஏப்ரலில் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட கடும் பாதிப்புக்குள்ளான மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளின் பெறுபேறுகளும் உரிய காலத்தில் வெளியிடப்படும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR யாழ் கொழும்பு எக்ஸ்போ ஏயார்
தினசரி விமான சேவை
Your friend in the skies...
யாழ்ப்பாணத்தில் 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
வானத்தில் உங்கள் நண்பன்...
E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,

# அரசியல்வாதிகளின் பதவி மோகத்திற்கு நீங்கள் பலியாகுவதை நாம் விரும்பவில்லை

## பெண்கள் பண்பாட்டு மையத்தினர் படையினருக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த் தேச நிர்மாணத்தில் பெண்கள் பங்களிப்புச் செய்வதற்கு இராணுவ ஆக்கிரமிப்புகள் பெரும் தடையாகவுள்ளது என யாழ். மாவட்ட பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சிங்களக் கிராமங்களிலிருந்து இங்கு வந்து எங்கள் தேசத்தின் தெருக்களிலும் ஒழுங்கைகளிலும் எங்கள் வீடுகளிலும் வீட்டு முற்றங்க்ளிலும் இராணுவ உடையுடனும் கைகளில் துப்பாக்கியுடனும் நிற்பது செய்யத்தகாத செயலென நாம் எண்ணுகின்றோம்.

எங்கள் குடிமனைகளில் சிங்கள இராணுவம் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் கால பதித்து நடக்கும் மண்ணில் உங்கள் சப்பாத்துக் கால்கள் உலாவித் திரிவதை எங்கள் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. எமது பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை வீட்டிலிருந்து வெளியே விடுவதற்கு அஞ்சுகிறார்கள். நீங்கள் அந்நிய இராணுவம் என்பதை அவர்கள் எங்களுக்கு நினைவு படுததிக் கொண்டே இருக்கிறார்கள். தங்கள் பெண்பிள்ளைகள் ஆற்றல் மிக்கவர்களாய் வளர்வதை அவர்கள் விரும்புகிறார்கள். எங்கள் பெண் பிளைகளும்வெளியே வந்து ஆளுமை பெற்று சாதிக்கும் மனிதர்களாக உருவாகவே விருப்பம் கொணடுள்ளார்கள். ஆனால் தமது பிள்ளையின் வளர்ச்சி மீது கொண்டுள்ள விருப்பத்தை விட நீங்கள் அந்நியர் எமது மண்ணில் இருக்கின்றீர்கள் என்ற ஞாபகம் தரும் பயமே எமது பெற்றோரை வழிநடத்துகிறது.

நீங்கள் எல்லா இடங்களிலும் நிற்பதும் சில வேளைகளில் உங்கள் அருகிலேயே நின்று எமது இளைஞர்கள் சில பெண்களைக் கேலி பேசுவதும் எமது சுதந்திரமான நடமாட்டத்தை அரியண்டத்திற்குள்ளாக்குகிறது. எனவே நீங்கள் உங்கள ஊருக்குத் திரும்பிப் போவதையே நாம் விரும்புகின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் மீண்டும் ஒரு யுத்தம் வந்து விடும். அநியாயமாக இலங்கைத்தீவில் இரத்தம் சிந்தப்படுவதை நாம் விரும்பவில்லை. நாங்கள விரும்புவதெல்லாம் எங்கள் வீடுகளிலும் எங்கள் தெருக்களிலும் நாம் சுதந்திரமாக நடமாடுவதையும் நாம் சுதந்திரமாக செயல் புரிவதையுமே. நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென நாம் எதிர் பார்க்கின்றோம்.

உங்களது அரசியல்வாதிகள் தங்கள் சுய பதவி மோகத்திற்காக உஙகளைப் பலிக்கடாக்களாக அனுப்பியுள்ளார்கள். ஆனால் எம்மைப் போன்ற சக ம்னிதரான நீங்கள் பலிக்கடாக்களாகப் போய்விடக் கூடாதென நாம் கவலைப்படுகின்றோம். எனவே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் திரும்பிப் போய் விடுங்கள்.

உங்கள் எதிர்காலத்திற்காகவும் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் உங்கள் உறவுகளுக்காகவும் எங்களுடைய சுதந்திரமான வாழ்விற்காகவும் நீங்கள் திரும்பிப் போய் விடுங்கள் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## இலங்கையில் மீண்டும் பொதுத் தேர்தலா?

(கொழும்பு)

இலங்கையில் மிகவிரைவில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறலாம் என்று அரசியல் அவதானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு ஏற்பட்டுள்ள கடுமையான முரண்பாடுகள் நாட்டில் மண்டும் தேர்தல் ஒன்றை ஏற்படுத்தும் நிலைக்கு இட்டுச் செல்லும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் இந்த தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பொதுத்தேர்தல் ஒனறு இந்த ஆண்டில் நடைபெறும் என குறிப்பிட்டு இருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி அரசாஙகம் பதவியேற்று முதலாவது ஆணடு பூர்த்தி அடையவுள்ள நிலையில அரசுக்கு தொடர்ந்து வருகினற நெருக்குவாரங்களினால் அரசாங்கம் விரைவில் கலைக்கப்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.நாட்டின் நீண்ட காலப் பிரச்சினையாக உள்ள இனப் பிரச்சினை தீர்வு மற்றும் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனர்நிர்மாணப் பணிகளில் அரசாங்கம் உரியமுறையில் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பியினர் தொடர்ந்தும் முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாது என ஜனாதிபதி கருதுவதாகவும எனினும் தேர்தல் ஒன்றினை நடத்துவதன்மூலம் ஆட்சி அமைக்கும பலத்தைப் பெறும் நோக்கில் செயற்பட தர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சுதந்திரக் கட்சிக்குள தேர்தல் தொடர்பான முனைப்புககள் காணப்படுவதாகவும் தேர்தல ஒன்றுக்கு தயார்ப்படுத்தும் நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(க-9)

சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி

# சென்ஜோன்ஸ் கல்லூரி அணி 43 ஓட்டங்களால் வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கலலூரிக்கும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையேயான சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி கடந்த 4,7 ஆம் திகதிகளில் சென்ஜோன்ஸ கல்லூரி மைதானத்தில் நடைபெறறது.

4 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்ஜோன்ஸ் அணி தனது முதல் இன்னிங்ஸில் 8 விக்கெற்றுக்களை இழந்து 226 ஓட்டங்களைப பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொணடது.

நிருபன் ஆட்டமிழக்காது 74 ஓட்டஙகளையும், மதன் ராஜ் 36ஓட்டங்களையும எடுத்தனர். பந்து வீச்சில் தனாரன், ஜனார்த்தன், டிசான், யதுஷன் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 2 விக்கெற்றுக்களை இழந்து 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியின் விபத்தின் பின் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் ஆட்டம் 7 ஆம் திகதி தொடர்ந்த போது யாழ்ப்பாணக் கல்லூரி அணி 117 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

தனாரன் 37 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் நிருபன் 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி FOL LOW ON ஆனதால் மீண்டும் துடுப்பெடுத்தாட வேண்டிய நிலைககுத் தள்ளப்பட்டது.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் வெற்றிக்காக 109 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் 66 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெற்றுக்களையும் அது இழந்தது.

நவகீரன் 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். இதன்மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

(ற-7,39)

## இராசி பலன்

**10.03.2005**
**மாசி 26, வியாழக்கிழமை**
**அமாவாசை பிற்பகல் 03.46 மணிவரை**
**பூரட்டாதி பின்னிரவு 04.20 மணிவரை**
**இராகுகாலம் 1.53 - 3.23 மணிவரை**
**சுபநேரம் 07.53 - 09.23 மணிவரை**
**அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தனலாபம், மனமகிழ்ச்சி, போசன நன்மை. |
| இடபம் | சுப நிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம், புதிய விடயம். |
| மிதுனம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டம், அச்சமான நிலை. |
| கடகம் | வீண் தொல்லை, காரிய தடங்கல், அமைதிக் குறைவு, வாகன பயம். |
| சிங்கம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, தொழில் விருத்தி, விருந்துபசாரம். |
| கன்னி | சுப நிகழ்வு, தேக நலம், சத்துரு ஜெயம், தொழில் வருமானம். |
| துலாம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, மனக்கவலை, வியாபார விருத்தி. |
| விருச்சிகம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| தனுசு | தொழில் விருத்தி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை, பணவருவாய். |
| மகரம் | அதிக வார்த்தை, மாதர் நட்பு, முயற்சி தாமதம், பணவிரயம். |
| கும்பம் | ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி. |
| மீனம் | பிதாசிந்தை, காரிய அலைச்சல், பொருள் விரயம், தெய்வசிந்தை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

—வளவன்

**பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வழவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை.**

**உறுப்புரை 11.(1)**

(இ) உயர் தொழில், தொழில் ஆகியவற்றைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கான உரிமை.பதவி உயர்வு வேலைப் பாதுகாப்பு, சகல சேவை நலன்களும் நிபந்தனைகளும் என்பவற்றுக்கான உரிமை, தொழில் பயிலுனர் பயிற்சி, உயர்வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, மீண்டு வரும் பயிற்சி என்பவை உட்பட தொழிற் பயிற்சிகளையும் மீள் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.

மிகுதி நாளை.

# சூழல் அதிகார சபையின் உரிமம் பெற்ற நிறுவனங்களே இயங்க அனுமதிக்கப்படும்

## நல்லூர் பிரதேசசபை செயலாளர் அறிவிப்பு

(சுதுமலை)

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளான திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு பகுதிகளில் இயங்கும் பெரிய நிறுவனங்கள் சூழல் அதிகார சபையின் கீழ் உரிமங்கள் பெற்ற பின்னரே இயங்க அனுமதிக்கப்படும் என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து அறிவித்துள்ளார்.

சூழல் அதிகாரசபையின் உரிமங்கள் வழங்குவது தொடாபான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை நல்லூர் பிரதேசசபை மண்டபத்தில் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதேச செயலக சூழல் அதிகாரசபை அதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள், உள்ளூராட்சி உதவியாளர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டு எதுவித அனுமதி பெறப்படாது பல நிறுவனங்கள் சூழலை மாசுபடுத்தும் நடவடிக்கையில் இயங்குவதாக கருத்துத் தெரிவித்தார்கள்.

இதனையடுத்து, கருத்துத் தெரிவித்த வைரமுத்து, இன்று எமது பிரதேசங்களில் சனத்தொகை விரைவாக அதிகரித்துள்ளது. எனவே சுற்றாடலால் பொதுமக்களிற்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவது பற்றி முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துக் கொண்டேயுள்ளது.

எனவே சரியான முறையில் பரிசோதனை செய்து உரிமம் வழங்கிய பின்னரே இவை இயங்க அனுமதிக்கப்படும் எனவும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட தொழில் நடத்துபவர்களிற்கு அறிவித்து கலந்துரையாடி நடைமுறைப்படுத்தப்படும் எனவும் செயலாளர் தெரிவித்தார்.

முக்கியமாக அரிசி ஆலைகள், வாகன சுத்திகரிப்பு நிலையங்கள், வெல்டிங் கராஜ் போன்ற நிலையங்கள், வாகனம் திருத்தும் இடங்கள், உணவு பதனிடும் தொழிற்சாலைகள், குளிர்பானத் தொழிற்சாலைகள், கோழிப் பண்ணைகள் போன்றவை இப்பகுதிகளில் முதலில் தெரிவுசெய்வது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-252)

அரசிடம் குறைந்த விலையில் மாவை பெற்று

# கூடியவிலையில் பாண் விற்போரின் லைசன்ஸ் ரத்துச் செய்யப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்திடமிருந்து குறைந்த விலையில் கோதுமை மாவினைப் பெற்று, கூடிய விலைக்குப பாணை விற்கமுயலும் பேக்கரி உரிமையாளர்களின் 'லைசனஸ்' ரத்துச்செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் எம்.ஐ.எம். மூசின் தெரிவித்தார்.

பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை அதிகரித்ததையடுத்து மா மற்றும் பாணின் விலைகள அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்நிலை சில தினங்களே தொடரமுடியும். ஏனெனில் அரசாங்கம் போதியளவு மாவினை இறக்குமதி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக குறைந்தவிலைக்கு வழங்கி வருகின்றது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இதுதொடர்பாகத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வழங்கும் கோதுமை மாவைப் பெற்றுப் பாண் உட்பட மா உற்பத்திப் பண்டங்களை பேகரி உரிமையாளர்கள் அதிக விலைக்கு விற்று வருகின்றார்கள். இது நீடித்தால் அவர்களுக்கு மா வழங்குவது நிறுத்தப்படும்.

அத்துடன் பாணின் விலையை அதிகரிக்கமுடியாத வகையில் நுகர்வோர் அத்தியாவசியப் பொருளாக கோதுமை மா பிரகடனப்படுத்தப்பட்டு, கட்டுப்பாட்டு விலையொன்றை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# மார்ச் 20 முதல் 26 ஆம் திகதி வரை பிரார்த்தனை வாரமாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் இலங்கையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளார்கள்.

இவ் இயற்கை அனர்த்தததினால் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யும் நோக்குடன் சொடெக் நிறுவனத்தினால் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை பிரார்த்தனை வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தினங்களில் சகல மத வழிபாடுகளையும் பூசைகளையும செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இறுதிநாள் மௌனவிரதம் ஒன்றைச் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ற-19)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

11.03.2005 முதல் 16.03.2005 வரை

முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

* சக்தி குறைவு * ஞாபகமறதி * பயம்

* ஆளுமைக்குறைவு * நடுக்கம் * நித்திரை குறைவு

என்பவற்றிலிருந்து உடனடி விடுதலை பெற!

கவலையை விடுங்கள், ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும், மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு : இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

பலரது பாராட்டைப் பெற்ற

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் S.M.P.

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)

Govt.Regd.No.9492

Hot Line: 0777 569205 T.P: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)


பருத்தித்துறை வைத்தியசாலையின் அவல நிலை

# தரமுயர்த்துவதற்கான அனுமதி கிடைத்தாலும் உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை

## யாழ்.மாவட்ட சுகாதார பிரதிப் பணிப்பாளர் கேதீஸ்வரன் கவலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையைப் பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு அனுமதி கிடைத்தும் அதற்குரிய தேவைகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை என யாழ். மாவட்ட சுகாதாரப் பிரதிப் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ள வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் கூறினார்.

பருத்தித்தறை ஆதாரவைத்தியசாலை கேட்போர்கூடத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான யாழ்.மாவட்டத்தில் பதவியேற்றபின் முதல் முதலாக வருவது பருத்தித்துறை வைத்தியசாலைக்குததான். வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்ட பின்னர் தேவையானவற்றைக் கேட்டுப் பெறுவது சுலபம். எனது சேவைக்காலத்தில்தான் வவுனியா வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டது. அப்போது எனக்கு அங்கு கடும எதிர்ப்பு இருந்தது. இப்போது அவ் வைத்தியசாலை தரமான சேவையை மக்களுக்கு வழங்கி வருகிறது.

இதேபோல் பருத்தித்துறை வைத்தியசாலையையும் தரம் உயர்த்துவதற்கான அனுமதி முன்பே கிடைதததும் அதற்குரிய தேவைகள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அண்மையில் இவ்வைத்தியசாலைக்கு விஜயத்தை மேற்கொணட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் வைத்தியசாலையைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பிலுள்ள சுகாதாரப் பணிப்பாளா டாக்டர ஜெகநாதன் மூலம் இவ்வைத்தியசாலையின் தேவையான ஆளணிகள், உபகரணங்கள், மருந்து வகைகள் பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டதற்கிணங்கவே நான் இங்கு வந்துள்ளேன்.

மற்றும் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்துளளேன். அவற்றிற்கான தீர்வுகளை விரைவில் தருவேன். நிர்வாகக் கொடுப்பனவு சம்பந்தமான பிரச்சினைகளை நான் ஒவ்வொரு கிழமையும் ஒரு உத்தியோகத்தரை அனுப்பி அதிகாரியுடன் ஆராய்ந்தபோது, அவர் அதற்குரிய பதிலையும் மாவட்ட வைத்தியரின் மூலம் தனக்கு அனுப்பலாம் எனவும், அதைவிட எந்த பிரச்சினைகளையும் என்னுடன் நேரில் கதைத்துத் தீர்த்துக்கொள்ளலாம் எனவும் கூறினார்.

இவ்வைத்தியசாலை நலன்புரி சங்க வருமானத்தை வைத்தியசாலை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஏனென்றால எதற்கும் அரசை நம்பியிராது எங்கள் அபிவிருத்தியை நாமே செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-35)

# சுனாமியால் வீடிழந்தோருக்கு தற்காலிக வீடமைப்புத்திட்டம்

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படும் வரை தற்காலிக வீடுகளை அமைக்க அரசு முடிவுசெய்துள்ளது.

இரண்டு ஆண்டுகள் நிலைக்கக் கூடிய வகையில் இந்த வீடுகள் அமைக்கப்படவிருப்பதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

உத்தேச வீடுகளை 150 சதுர அடிகள் கொண்ட வகையில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதுடன் ஒரு வீட்டுக்கு ஐம்பதாயிரம் ரூபா செலவாகும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடுகளில் குடியேறும் குடும்பங்களுக்குத் தேவையான நர், மின்சாரம், பொதுக்கழிப்பறை உட்பட அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. வீடுகளை இழந்தவர்களுக்கு ஏற்றவகையில் இந் நிரந்தர வீடுகள் அமைக்கப்படவேண்டும் என்பதனால் அதுவரை தற்காலிக வீடுகளை அமைக்க முடிவு செய்யப்பட் டுள்ளது.

இந்த வீடமைப்புத்திட்டம் கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கு தொடர்நது இப்பணிகள் நடைபெறும என அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-4)

# விதவைகள், அனாதைகள் ஒய்வூதிய திட்டத்தை திருத்தியமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

விதவைகள், அனாதைகள் ஓயவூதிய திட்டத்தை திருத்தி அமைபபதற்கான புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிட்டிருப்பதாக ஓய்வூதிய திணைக்களம் அறிவித்திருக்கிறது.

இத்திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 1996ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் விதவைப் பெண்கள் 15 மாதத்திற்கான நிலுவைப்பணத்துடன் புதிய ஓய்வூதியத்திட்டம் ஒன்றின மூலம் நன்மை அடைவார்களென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைசசின் ஓய்வூதியப் பணிப்பாளர் கே.ஏ. திலகரட்ண தெரிவித்திருக்கிறார்.

திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியங்களை ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு சகல பிரதேச செயலகப் பிரிவு அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்திட்டத்தின் திருத்தம்மூலம் கொண்டுவரப்பட்ட அனுகூலங்கள் பெருந்தொகை ஓய்வூதியம் பெறுவோருக்கு இன்னமும வழங்கப்படவில்லையென்று முறையிடப்பட்டிருக்கிறது.

சுமார் 19 ஆயிரம் ஓய்வூதியக்காரர்கள் திருத்தியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியத்தைப் பெறத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# முகமாலை சோதனைச் சாவடியில் சிற்றுண்டிச்சாலை திறந்து வைப்பு

(முகமாலை)

முகமாலை சோதனைச் சாவடித தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 55வது படையணியின் சேனாதிபதி மேஜர் ஜெனரல் வீ.ஆர்.சில்வாவினால் கடந்த மாதம அடிக்கல் நாடடப்பட்ட சிற்றுண்டிச்சாலை கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு சுபநேரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அதற்குத் தேவையான பொருட்கள் சேனாதிபதியின் ஒத்துழைப்பால் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷினால் வழங்கப்பட்டது. அதைக் கட்டிமுடிப்பதற்கு 55வது சேனையின் ஒத்துழைப்பும், உதவியும படையினரினால் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு உள்ளேவரும் சகல பொருட்களையும் பரிசோதனை செய்யும் இந்த முகமாலை சோதனைச் சாவடியில் ஒவ்வொருநாளும் அதிகமான வாகனங்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இப்பிரயாணிகள் மற்றும் அந்த இடத்தில் தொழிலுக்காக இருக்கும் தொழிலாளிகள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவியாகவே இச்சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் தொழில் செய்யும தொழிலாளிகள் இராணுவத்தினருக்கு இந்த நடவடிக்கைக்கு மேற்கொண்ட ஆர்வத்திற்கு நன்றியைத தெரிவித்துக்கொண்டனர். (ற)

# நஷ்டஈட்டுச் சட்டங்களில் மாற்றம் கொண்டுவரப்படும்

## புதிய சட்டம் வரும் 15ஆம் திகதி முதல் அமுல்

(கொழும்பு)

அரசாங்கத்தால் அறிமுகம் செயயபபட்ட புதிய நஷ்டஈட்டு முறை இம்மாதம் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவிததலை வெளியிட அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.


சிறிலங்கா சுதந்திர தொழிற்சங்க நிறைவேற்றுக்குழுவின் விசேட கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில் முடிவுக்கு கொண்டுவரப்படும்போது உலகில் இலங்கையிலேயே கூடுதலான நஷ்டஈடு வழங்கப்படுகிறது.

இதன்படி 48 மாத சம்பளம், அல்லது அதிகபட்சமாக 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுகினறன. இதற்குப் புறம்பாக தொழில்வாய்ப்பொன்றினை பெறும்வரை நிதியமைசசின் மூலம் 12 மாதகால சம்பளம் கொடுப்பனவாக வழங்கபபடுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது அமுலில உள்ள தொழிலாளர் சட்டத்திலுள்ள சில சரத்துக்களில் மாற்றம் கொண்டுவர முத்தரப்பு சிபார்சுக் குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் குழுவின் சிபார்சு அறிக்கை கிடைத்தவுடன் மாற்றங்கள் கொண்டுவரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# மீள்பார்வை



## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 3



### அத்தியாயம்II

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டால் பின்னர் அக்கலைப்பை மாற்றமுடியாது. ஜனாதிபதிக்குக் கலைப்பை இரத்துச் செய்து சபைக்குப் புத்துயிரளிப்பதற்கான தத்துவம் உரித்தாக்கப்படவில்லை.

முன்னர் குறிப்பிட்டவாறு கலைப்பொன்றின் மூலம் பாராளுமன்ற அரங்கின் திரை மூடப்படுகின்றது. அவ்வேளையில் ஒழுங்குப் பத்திரத்திலிருந்த அலுவல் எதுவும் அடுத்த பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. எனவே ஏதேனும் முடிக்கப்படாத அலுவல் முதலாவது படியிலிருந்து திரும்பவும் புதிதாகச் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை சட்டமூலங்களை (மூன்றாவது மதிப்பீட்டின் பின்னர் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்களும், அவை சான்றுப்படுத்தப்படாதிருப்பின்) மனுக்களை. குழுக்களின் முன்னருள்ள விடயங்களை. வினாக்களை மற்றும் சிறப்புரிமை பற்றிய விடயங்களைக் கூட உள்ளடக்கும். 1994 பெப்ரவரியில் குற்றவியல் நடவடிக்கை முறை (திருத்தல்) சட்டமூலம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்தும் கலைப்புக்கு முன்னர் சபாநாயகர் அதனை சான்றுபடுத்தியிராதபடியால் அது காலாவதியாகியது. 1994 ஆகஸ்டில் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அது திரும்பவும் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற ஒரு பிரகடனம். பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்துக்கான தேதியை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கும் பிற்படாமல் நிர்ணயிப்பதாக இருக்க வேண்டும். உறுப்புரை 70(6) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கான சூழ்நிலைகளில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் நான்கு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படலாம். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதிக்கும் அதன் முதலாவது கூட்டம் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் வருமாயின் இவ்வேற்பாடு பொருந்தும்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி பின்னர் செய்யப்படும் ஒரு பிரகடனத்தின் மூலம் மாற்றப்படலாம். எனினும் அவ்வாறு நிர்ணயிக்கப்படும் புதிய தேதி. பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற தொடக்கப் பிரகடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாக இருக்கவேண்டும்.

அவசரகால நிலைப் பிரகடனத்தை அங்கீகரிக்கும் நோக்கத்துக்காக மட்டும், கலைக்கப்பட்ட ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைப்பதற்கு அரசியலமைப்புத் திட்ட வட்டமாக ஏற்பாடு செய்கின்றது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தை அழைக்கின்ற ஒரு பிரகடனம் அத்தினத்திலிருந்து பத்தாவது நாளில் அல்லது மூன்று முதல் பத்து நாட்களுக்குள் அது கூட வேண்டுமெனத் தேவைப்படுத்த வேண்டும். அவசரகால நிலை முடிவுற்றதன் பின்னர் அல்லது பிரகடனம் மீளப்பெறப்பட்டதன் பின்னர், இவற்றில் எது முதலில் இடம்பெறுகின்றதோ அப்போதிருந்து பாராளுமன்றம் மீண்டும் கலைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பாராளுமன்றம் கட்டாயமாக அழைக்கப்பட வேண்டுமென்று தேவைப்படுத்துகின்ற ஓர் ஏற்பாட்டை உறுப்புரை 155 (4) கொண்டுள்ளதாகத் தோன்றுகின்ற அதேவேளையில், அவசரகால நிலையில் பாராளுமன்றத்தின் செல்லுபடியாகும் நிலை தொடர்வதற்கு அது அழைக்கப்பட வேண்டிய அவசியமில்லையென்று பொருள் கொள்ளக்கூடியதான ஒரு முரணான ஏற்பாட்டை 155(6)ஆம் உறுப்புரை கொண்டுள்ளது.

பாராளுமன்றக் கலைப்புக்கும் புதிய பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்படுவதற்கும் இடைப்பட்ட காலம் இடையாட்சிக் காலமெனக் கருதப்படவேண்டும்.

உறுப்புரை 70(1) (அ) இன் கீழ். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஓராண்டு காலம் முடியும் வரை பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அதனைக் கலைக்கும்படி ஜனாதிபதியைக் கேட்டாலன்றி பாராளுமன்றத்தைக் கலைப்பதிலிருந்து ஜனாதிபதி விலக்கப்படுகின்றார். அவர் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் அரசாங்கக் கொள்கைக் கூற்று நிராகரிக்கப்படுவதன் பேரிலும் பாரா ளுமன்றத்தைக் கலைக்கக் கூடாது. ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தைப் பொறுத்தவரையில் அது முதல் தட வையாக நிராகரிக்கப்பட்டால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடாது. எனினும் அது இரண்டா வது தடவை நிராகரிக்கப்பட்டால் அவர் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும். எனவே முதலாவது கூட் டத் தொடரின் போது இரண்டாவது தடவையாக ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிராகரிக்கப்பட்டால் பாராளுமன் றம் கலைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரை 70(1)(இ) இன் ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதி மீது அரசியல் குற்றம் சாட்டுகின்ற தீர்மானமொன்றைச் சபாநாயகர் ஏற்றுக்கொண்ட பின்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதிலிருந்தும் ஜனாதிபதி தடுக்கப்பட்டுள்ளார்.

### அமர்வு நிறுத்தம்

அமர்வு நிறுத்தமானது பாராளுமன்றத்தின் ஒரு தற்காலிக இடை ஓய்வுக் காலமாகும். அமர்வு நிறுத்தங்களுக்கு இடையிலான கூட்டத் தொடர்கள் எல்லையுறுதியற்ற நீட்சியுடையவை. அமர்வு நிறுத்தமொன்று இரு மாதங்களுக்குக் கூடிய காலம் நீடிக்கலாகாதென்பதுடன் அது ஜனாதிபதியின் பிரகடனத்தின் மூலம் தான் செய்யப்படுகின்றது. பாராளுமன்ற அமர்வு நிறுத்தப்படும் போது அமர்வை நிறுத்துகின்ற பிரகடனம் புதிய கூட் டத்தொடர் ஆரம்பிக்கின்ற தேதியைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். அத்தகைய தேதி அமர்வு நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து இரு மாதங்களுக்குக் கூடியதாக இருத்தலாகாது. எனினும் பாராளுமன்றத்தை அழைக்கிற அத்தகைய தேதிய ஜனாதிபதியின் மற்றொரு பிரகடனத்தின் மூலம் முன்கொண்டு வரப்படலாம். ஆயின் அத் தகைய புதிய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குக் குறையாத ஒரு தேதியில் தான் பாராளுமன்றம் அழைக்கப்படலாம்.

அமர்வு நிறுத்தமொன்றின் போது சபாநாயகர் தொடர்ந்தும் செயற்படுவதுடன் உறுப்பினர்கள் அவர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளாதபோதிலும் தமது உறுப்புரிமையை தொடர்ந்தும் வைத்திருப்பர். அமர்வு நிறுத்தமொன்றின் செயல் விளைவு அப்போதைக்குச் சபையின் முன்னருள்ள எல்லா அலுவல்களையும் இடைநிறுத்துவதாகும். அரசியல் குற்றப்பிரேரணைகள் தவிர. அவ்வேளையில் முடிவு செய்யப்படாதுள்ள நடவடிக்கைகள் எல்லாம் ஒழிக்கப்படுகின்றன. ஒரே சாரத்தைக் கொண்ட ஒரு சட்ட மூலம். பிரேரணை அல்லது கேள்வி ஒரே கூட்டத்தொடரின் போது இரண்டாவது தடவையாக அறிமுகப்படுத்தப்பட முடியாது. எனினும் அமர்வு நிறுத்தமொன்றின் பின்னர் அடுத்துவரும் கூட்டத்தொடரில் அதனை அறிமுகப்படுத்தலாம்.

அமர்வு நிறுத்தத்தின் காரணமாக முடிவு செய்யப்படாத அலுவல்கள் அத்துடன் முடிந்து விடுவதில்லை. எனவே முடிவு செய்யப்படாத ஒரு விடயம் அந்தக் கட்டத்திலிருந்து, புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகியதன் பின்னர் தொடரப்படலாம். அதேவகையில் குழுவொன்றில் முடிவு செய்யப்படாதுள்ள ஏதேனும் அலுவல் புதிய கூட்டத் தொடரின் போது மேலும் தொடரப்படலாம். புதிய கூட்டத்தொடரின் ஆரம்பத்தில், முடிவு செய்யப்படாதிருந்த எல்லா அலுவல்களையும் தொடர விரும்பினால், அவற்றை மீண்டும் ஒழுங்குப் பத்திரத்தில் அறிமுகப்படுத்த வேண்டும். எனவே எல்லாச் சட்டமூலங்களும் அவ்வாறு மீள அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு புதிய கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் ஆலோசனைக் குழுக்களும் தெரிவுக் குழுவும் மீள அமைக்கப்படவேண்டியது அவசியமாகும். உயர் பதவிகள் பற்றிய குழு அமர்வு நிறுத்தத்தின் போது கூடத் தொடர்ந்து செயற்படலாம். ஏனைய குழுக்கள் தொடர்பில் குறிப்பிட்டுக் கூறப்படாததனால், இலங்கைப் பாராளு மன்றத்தில் ஏனைய எல்லாக் குழுக்களும் இடை ஓய்வுக் காலத்தில் செயற்படாதொழிகின்றன. மரபின் பிரகாரம் ஒவ்வொரு புதிய கூட்டத்தொடரினதும் தொடக்கத்தில் அவை மீள அமைக்கப்படுகின்றன.

(தொடரும்)

# கல்வித்துறை ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைக் கல்வியின் விடயப் பரப்புக்குள் வரலாறும் ஒரு பாடமாகச் சேர்க்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



கல்வியமைச்சுப் பொறுப்பை வகிக்கும் ஜனாதிபதி தற்போது ஏழாம் வகுப்பு வரைக்குமான வரலாற்றுப் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த சந்திப் பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினர் இந்தச் சந்திப்பின்போது கல்வித் துறை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் தமது அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர்.அவ்வாறான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் குற்றச்சாட்டை ஜனாதிபதி மறுத்துள்ளார். (ந-4)

**அன்பு வாசகர்களே!**

**எதிர்வரும் 14.03.2005இல் இருந்து விவாத அரங்கு மீண்டும் பிரசுரமாகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**


## விவாத அரங்கு - 7

**விடயம்**

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீரபடுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.






சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென ஐ.நா. உணவு விவசாயத்திட்ட ஆலோசகரும், இந்து வாலிபர் சங்க முன்னாள் உறுப்பினருமான சு. திருஞானசம்பந்தர் மற்றும் இந்து வாலிபர் சங்க அவுஸ்திரேலிய கிளை உறுப்பினர் த. ஆதித்தன் ஆகியோர் யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளரிடம் துவிச்சக்கர வண்டிகளை ஒப்படைப்பதையும் படங்களில் காண்க.

(படங்கள்: பாலமுருகன்)

# ஜியாங் இராணுவ கமிஷன் பதவியை ராஜினாமா செய்துகொண்டார்



(பீஜிங்)

தீவிர அரசியலில் இருந்து ஓய்வுபெறும் வகையில் சீனாவின் அதிகாரம் மிகுந்த மத்திய இராணுவ கமிஷன் தலைவர் பதவியில் இருந்து முன்னாள் அதிபர் ஜியாங் ஜெமீன் ராஜினாமா செய்தார். அதை சீனப் பார்லிமெண்ட் ஏக மனதுடன் ஏற்றுக்கொண்டது.

சீனாவில் இராணுவக் கமிஷன தலைவர் பதவி அதிகாரம் மிகுந்தது. சீனாவின் மூன்றாவது தலைமுறை தலைவராகக் கருதப்படும் 78 வயதான ஜியாங் ஜெமீன், கடந்த 15 ஆண்டாக அப்பதவியில் இருந்தார்.

அதிபர் பதவியில் இருந்து விலகிய போதும் இராணுவக் கமிஷன் தலைவர் பதவியில் தொடர்ந்தார். தற்போதைய அதிபர் ஹுஜிண்டாவோவுக்கு முழு அதிகாரம் அளிக்கும் வகையில் இராணுவ கமிஷன் தலைவர் பதவியை கடந்த 4ஆம் தகதி ஜியாங் ஜெமீன் இராஜிநாமா செய்தார்.

சீன மக்கள் காங்கிரஸ் கூட்டம் தலைநகர் பீஜிங்கில் நடந்தது. இராண்டாயிரத்து 853 பிரதிநிதிகள் பங்கேற்றனர். ஜியாங் ஜெமீன ராஜிநாமா தொடர்பாக அதில் பரிசீலனை நடந்தது. அதை எதிர்த்து எட்டுபேர் வாக்களித்தனர். ஐந்து பேர் நடுநிலை வகித்தனர். இரண்டாயிரத்து 840 பேர் ஆதரவுடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. இராணுவக் கமிஷன் தலைவராக அதிபர் ஹுஜிண்டாவோ விரைவில் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ப)

WORLD NEWS
உலக தரிசனம்



புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்த அரியானா புதிய முதல்வர் புபிந்தர் சிங் ஹுடா, பிரதமருக்கு இனிப்பு ஊட்டிய காட்சி.

# ஒரிசா கடற்கரையில் முட்டையிட குவிந்த 2 லட்சம் ஆமைகள்

(கேந்திரபாரா)

ஒரிசா மாநிலத்தின் ஆரிமாதா கடலோரப் பகுதியில் முட்டையிடுவதற்காக கடந்த 5 நாட்களில் இரண்டு லட்சம் கடல் ஆமைகள் வந்துள்ளன.

இதுகுறித்து வனவிலங்குகள் பாதுகாப்புத்துறையினர் தெரிவித்ததாவது.

கடந்த வியாழக்கிழமை காலையிலிருந்து கேந்திரபாரா மாவட்டத்தின் ஆரிமாதா கடறகரைப் பகுதிககு பெருமளவு கடல் ஆமைகள் வந்து மண்ணைத் தோண்டி முட்டையிட்டுச் செல்கின்றன.

ஆலிவ் ரிட்லே என்ற வகையைச் சேர்ந்த இந்த வகை ஆமைகள் ஒரிசா கடற்பகுதியில்தான் அதிகம் உள்ளன.

வியாழக்கிழமை மட்டும் ஆரிமாதா கடற்கரைக்கு 75ஆயிரம் ஆமைகள் வந்தன. இது இன்னும் ஓரிரு தினங்கள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆமைகளின் முட்டைகளைப் பாதுகாக்க அதிகபட்ச கவனம் செலுத்தப்படும். கடற்கரை முழுவதும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆமைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக வனத்துறை முதன்மைக் காப்பாளர் சுரேஷ் மொகந்தி தலைமையில் அதிகாரிகள் குழு இங்கு முகாமிட்டுள்ளது என்றனர். (க)

# மு.க.ஸ்டாலினை கொல்ல சதி



(சென்னை)

தி.மு.க.துணை பொதுச்செயலாளர் மு.க.ஸ்டாலினை தி.மு.க. தொண்டர் போல் சென்று பேனா துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல அ.தி.மு.க. முக்கிய புள்ளி மூலம் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று மத்திய உள்துறை டில்லிக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

தி.மு.க. துணை பொதுச்செயலாளராக மு.க.ஸ்டாலின் உள்ளார். இவா தமிழ்நாடு முழுவதும் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்து தி.மு.க. உறுப்பினர் வீடுகளில் நடக்கும் சாதாரண விழாக்களில்கூட பங்கேற்று வருகிறார். அந்தந்த ஊர்களில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.கவின் ஊழல்களை அம்பலப்படுத்தி வருகிறார்.

இதனால் அவர் பேசும் கூட்டங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் திரள்கிறார்கள். அதுமட்டுமல்ல இளைஞர் அணியினரும் புத்துணர்ச்சி பெறறு சுறுசுறுப்போடு பணியாற்றி வருகிறார்கள். இவரது வளர்ச்சியைக் கண்டு அ.தி.மு.க மேலிடம் நிலை குலைந்து போயுள்ளது.

இதனால் மு.க.ஸ்டாலினை எபபடியாவது தீர்த்துக்கட்டினால் தேர்தலில் எளிதாக வெற்றிபெற்றுவிடலாம். அப்படி இல்லாவிட்டால் அவரது சூறாவளி சுற்றுப்பயணத்துக்கு அ.தி.மு.கவால் தாக்குப்பிடிக்கமுடியாது என்று திட்டமிட்டு மாநில உளவுத்துறை முக்கிய அதிகாரி ஒருவரை அழைத்து ஆலோசனை செய்யப்பட்டதாம்.

அப்போது அந்த அதிகாரி, தி.மு.க. கட்டுக்கோப்பான கட்சி. அந்தக் கட்சித் தலைவர்களை எளிதில் நெருங்கமுடியாது. மு.க.ஸ்டாலினை சுற்றி இளைஞர் அணித் தொண்டர்கள் எப்போதும் இருப்பார்கள். ஆகையால் அவர் அருகில் செல்வது என்பது சாதாரணம் அல்ல. ஆனால் கட்சித் தொண்டர்போல் சென்றால் எப்படியும் காரியத்தை முடித்துவிடலாம் என்று கூறினாராம.

இதைக் கேட்டதும் உளவுப் பிரிவு அதிகாரிகள் அனைவரும், அப்படியே செய்யலாம் என்றும, அதற்கான திட்டங்கள் பற்றியும் விரிவாகச் சொன்னார்களாம்.

கூலிப்படையினர் இருவர் இதற்கிடையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கோட்டூர்புரம் பாலம் அருகில் உள்ள ஒரு டிபன் கடையில் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல தகராறு செய்துள்ளனர். உடனே கடைக்காரர் பணத்தைத் தராமல் இங்கிருந்து போகமுடியாது என்று கூறியுள்ளார். உடனே அந்த இரண்டு பேரும் நாங்கள் யார் தெரியுமா? திண்டுக்கல்லில் உள்ள கூலிப்படையினர் மேலிடத்தில் இருந்து எங்களை வரவழைத்துள்ளனர். ஆகையால் நீ எங்களை எதுவும் செய்ய முடியாது என்று மிரட்டினார்களாம். ஆனால் அந்தக் கடைக்காரர் அதற்கு வேறு ஆட்களைப் பார். நீ யாராக இருந்தாலும் எனககுப் பணம் கொடுக்காமல் உன்னை இங்கிருந்து போக விடமாட்டேன் என்று தடுத்துள்ளார்.

அவர்கள் தாங்கள் மறைத்து வைத்திருந்த பேனாத் துப்பாக்கியை எடுத்துக்காட்டி, இந்தத் துப்பாக்கி சுவிட்சர்லாந்து நாட்டில் இருந்து வந்துள்ளது. இதை வைத்துச் சத்தம் இல்லாமல் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன் என்று மிரட்டியுள்ளனர். இதுபற்றி கோட்டூர்புரம் பொலிசுக்குத் தகவல் கிடைத்தது. உடனே உதவி கமிஷனர்கள் ராமச்சந்திரன், பாலசந்திரன், இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் ஆகியோர் பொலிஸ் படையுடன் விரைந்துசென்று அந்த இரண்டு பேரையும் துப்பாக்கி முனையில் மடக்கிப் பிடித்தனர். அதன்பிறகு அவர்கள் இரண்டுபேரிடமும் துருவித் துருவி விசாரித்தனர். விசாரணையில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களைக் கூறினார்களாம்.

இதைத்தொடர்ந்து அவர்களைப் பொலிஸார் சோதனை போட்டபோது ஒரு துப்பாக்கிப் பேனா, நாட்டு வெடி குண்டு, ஒரு கத்தி ஆகியவை இருந்துள்ளன. அவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர். இவர்கள் 2 பேரை பிடித்ததும் அ.தி.மு.க முக்கிய பிரமுகர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்கு போன் செய்து, அவர்கள இரண்டு பேரையும கைதுசெய்து உடனே கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துவிடுங்கள் என்று கூறினாராம். இதனால் பொலிஸாரும் அவசர அவசரமாக அந்த இரண்டுபேரையும் ஜெயிலில் அடைத்தனர்.

கைதான 2 பேரும் அ.தி.மு.க. முக்கிய புள்ளிக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களாம். இவர்கள் தலைமையில் ஒரு கூலிப்படையே உள்ளதாம். இந்த முக்கிய புள்ளி வில்லங்கமான நிலத்தை விலைக்கு வாங்கி கூலிப்படையை வைத்து காலிசெய்து பல கோடி ரூபாய் சம்பாதித்து உள்ளவராம்.

ஆகையால் அவரை உளவுப் பிரிவு அதிகாரி ஒருவர் ரகசியமாக ஒரு சொகுசு ஹோட்டலில் அடிக்கடி சந்தித்துப் பேசி வருவாராம். அதன் பிறகு சதித்திட்டம் உருவானதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சதியை நிறைவேற்ற கைதான ஒருவரை ஜாமீனில் எடுதது சென்று அவருக்கு தி.மு.க தீவிர தொண்டர் போல் கலைஞர் படம், கடசிக் கொடி பச்சை குத்தப்பட்டதாம. பிறகு கட்சிக்காரர்போல் சென்று மு.க.ஸடாலினின் பிறந்தநாள் விழாவல் அவருக்கு மாலை அணிவித்துவிட்டு ஆட்டோகிராப் வாங்க பேனாவைக் கொடுபபதுபோல் நைசாக அநத மூடியை லேசாகத் திறந்தாலே போதுமாம். எந்தச் சத்தமும் இல்லாமல புல்லட் நெஞ்சில் பாய்ந்துவிடுமாம. பிறகு அந்த புல்லட் உள்ளே போய் சில நிமிடங்களில்தான் வேலை செய்யுமாம. அதற்குள் அங்கிருந்து நைசாக தப்பிச்சென்றுவிடலாம் என்று பல்வேறு ஆலோசனைகள் செய்து ஏற்பாடு செய்யப்பட்டதாம்.

இந்தத் துப்பாக்கி சுவிட்சர்லாந்து நாட்டில்தான் அதிகளவில் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். திடீரென்று இந்தத் துப்பாக்கியில் சிறு கோளாறு ஏற்பட்டதால் அந்தத் திட்டம் கடைசிநேரத்தில் தள்ளி வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ற)



நேபாளத்தில் உள்ள காத்மண்டுவில் நேற்றுமுன்தினம் இராணுவ தினம் கொண்டாடபபட்டது. இதனையொட்டி நடந்த அணிவகுப்பு மரியாதையை நேபாள மன்னரும், கமாண்டருமான ஞானேந்திரா ஏற்றுக்கொண்டார்.

# மகனைக் கொன்ற தந்தைக்கு அமெ.இல் மரண தண்டனை

(பாபிலியான்)

அமெரிக்காவில் தன்னுடைய 4 வயது மகனை கடவுளுக்கு எதிரான சாததான் என்று கருதி கொலைசெய்த தந்தைக்கு கடந்த வியாழக்கிழமை ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

2003ஆம் ஆணடு இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது. தன்னுடைய மகனின் நெற்றியில் '666' குறியீடு இருந்த காரணத்தினால் அவன் கிறிஸ்துவுக்கு எதிரானவன் என்று கருதிக் கொலை செய்ததாகக் கூறியுள்ளார் சிறுவனின் தந்தையான இவான் ஹெங்க்.

சிறைக்குச் செல்வதற்கு முன்பு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா என்று இவான் ஹெங்கிடம் நீதிபதி கேட்டார். அதற்கு அவர் 'ஒன்றுமில்லை. சிறைக்குச் செல்லத் தயாராய் இருககிறேன்' என்று கூறியுள்ளார். சிறுவனின் தாய் ரெபெக்காவிடம் கேட்டதற்கு 'இந்தத் தண்டனை சரிதான. இதைவிட சற்று அதிகம் எதிர்பார்த்தேன்' என்று தெரிவித்தார். (ற)

# பொலீவிய அதிபர் மேஸா இராஜினாமா செய்ய முடிவு

பொலீவியாவின் அதிபர் காலஸ் மேஸா தனனுடைய அரசுக்கு எதிராக அதிருப்தி நிலவுவதால் எதிர்வரும் திங்கட்கிழமை பதவியை இராஜினாமாச்செய்ய முடிவெடுத்துளளாா.

இதற்கு முன்னர் கொன்சாலோ சான்செஸ் அதிபராய் இருந்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் அவருக்கு எதிரான தீவிர போராட்டங்களில் சுமார் 56 பேர் உயிரிழந்ததையடுத்து அவர் இராஜினாமாச் செய்தார். அவரையடுத்து கார்லஸ மேஸா 2003 ஆம் ஆண்டு அதிபராய்ப் பதவியேறறார்.

பொலீவியாவின் ஒருபகுதியில தன்னாட்சி வேண்டி போராட்டங்கள நடைபெற்றுவருகின்றன. இதையொட்டி ஏற்பட்டுள்ள அரசியல் நெருககடிகளால் அதிபர் பதவியை இராஜினாமச செய்ய இவர் முடிவெடுத்துளளார். (க)



ஜப்பானில் உள்ள நகோயாப் பகுதியில் எதிர்வரும் 25ஆம் திகதி ரோபோ கண்காட்சி ஆரம்பமாகிறது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம 25ஆம் திகதி வரை இந்தக் கண்காட்சி நடக்கவுள்ளது. ஒன்றரை கோடி பேர் இந்தக் கண்காட்சிக்கு வருவார்கள் என எதிர்பார்க்கபபடுகிறது. ஜப்பானிய 'டிஎம்சுக்' நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ரோபோ, விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகளில் சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டெடுக்கும் திறன்வாய்ந்தது. ஒன்றரை மீற்றர் உயரமுள்ள 'மியுஜிரோ' என பெயரிடப்பட்டுள்ள இந்த ரோபோ இரவுநேரத்தில் ரோந்து சுற்றிக் காவல் காக்கும் பணியிலும் ஈடுபடுமாம். ரோபோ கண்காட்சியில் மியுஜிரோவும் இடம்பெறவுள்ளது.




# கறைகளை நீக்குவதற்கு முன்



துணிகளில் கறைபட்டவுடன் கழுவினால் கறைகள் மறைந்துவிடும். ஆனால் சில சமயங்களில் கறைகளை நீக்குவது அவ்வளவு சுலபமில்லை. இதற்குத் தனிக் கவனம் தேவைப்படுகிறது.

கறைகளை நீக்குவதற்கு முன் செய்யவேண்டியவை, துணிகளை ஊறவைப்பதற்கான குறிப்புகள் சில இதோ:-

பதைச் சரிபார்க்கவும்.

* கம்பளி, பட்டு உடைகளுக்கு ப்ளீச் அடங்கிய சலவைத்தூளை உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.

* அதிகமாகக் கறைபடிந்த துணிகளை ஊறவைத்துத் துவைக்கவேண்டும்.

**ஊறவைப்பதற்கு முன் கவனிக்க வேண்டியவை:**

* உடையின் சாயம் மாறுமா? என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

# கவனிக்க வேண்டியவை....

**கறைகளை நீக்குவதற்கு முன**

* மறக்காதீர்கள்! கறைகள் பட்டவுடன் உடனடியாக அதை நீக்கினால் அவை முழுமையாக மறையும் வாய்ப்புண்டு.

* உங்கள் உடையின் பாது காப்பு விதிகளைப் படித்து கறைகளை நீக்கும்போது உடைகளுக்கு ஏதேனும் சேதம் ஏற்படுமா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

* நீங்கள் உபயோகிக்கும் சோப் உங்கள் துணிகளுக்கு ஏற்றதா என்பதைச் சரிபார்த்து உபயோகிக்கவேண்டும்.

* சலவைத்தூள், சோப் ஆகியவற்றில் உள்ள குறிப்புகளையும் மறக்காமல் படிக்கவும்.

* உங்கள் துணிகளின் நிறம் போகாமல் இருக்குமா என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

* பட்டு, கம்பளி, தோல் மற்றும் உலோகத்தாலான பொருட்கள இல்லாத ஆடைகளாக இருக்க வேண்டும்.

* சோப் அல்லது சலவைத்தூள் முழுமையாகக் கரைந்து விட்டதா என்று சரிபார்க்கவும்.

* தண்ணீரின் வெப்பத்தை உடை தாங்குமா என்று சரி பார்க்கவும்.

* உடைகள் அளவுக்கு அதிகமாகக் கசங்கிவிடாமல் பார்த்துக்கொள்ளவும்.

* வெள்ளைத் துணிகளை வண்ணத் துணிகளோடு கலந்து ஊறவைக்காமல் தனியாக ஊறவைக்கவும்.

**உடைகளின் சாயம் மாறுமா?**

* உடைகளின் சாயம் போகுமா? இல்லையா? என்று சந்தேகமாக இருந்தால், துணியின் ஒரு சிறிய பகுதியை நனைத்து, அதன்மேல் வெள்ளைத்துணி அல்லது டிஷ்ஷு"பேப்பர் வைத்து அயன்பண்ணவும். துணியின் நிறம் அதில் பட்டால் துவைக்கும்போது சாயம் நிச்சயம் போகும்.

**சாயம் போகும் துணிகளை எப்படித் துவைப்பது?**

* ஊறவைக்காமல், தனியாக குளிர்ந்த நீரில் துவைக்க வேண்டும்.

* சாயம் மாறும் துணிகளை வீட்டில் துவைக்காமல் டிரை கிளீனிங் செய்யலாம்.

உங்கள் வீட்டின் துணிகள் கறையின்றி பளிச்சிட மேலுள்ள குறிப்புகளை மறக்காமல் பின்பற்றுங்கள்.

# உங்கள் குழந்தை புத்திசாலி ஆக வேண்டுமா?



இன்றைய பெண்களில் சிலர் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதையே விரும்புவதில்லை. அவ்வாறு கொடுத்தால் தங்களின் அழகு கெட்டுப்போய்விடுமோ? என்று நினைப்பதுதான் அதற்குக் காரணம். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை இங்கே படியுங்கள்.

தயாப்பால் இயற்கையானது. அதில் எந்தவித கலப்படமும் செய்ய இயலாது. தாய்ப்பாலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிக அளவில் இருக்கிறது.

அண்மையில் இந்தியா முழுவதும் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது தயாப்பால் குடித்து வளரும் குழந்தைகள் நோய்க் கிருமிகளால் 4 தடவை பாதிக்கப்பட்டார்கள் என்றால், தாய்ப்பால் குடித்து வளராத குழந்தைகள் 144 தடவை பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

தாயப்ப்பாலில் உள்ள இன்னும் சில சிறப்புகள் இதோ:-

* குழங்தைகளுக்கு ஆஸ்துமா எதிர்ப்பு சக்தி அதிகமாகிறது.

* புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளை விட தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் புத்திசாலியாக இருப்பார்கள்.

* எடை அதிகமில்லாதவர்களாக வளர்வார்கள்.

* அலர்ஜி அவ்வளவு சுலபமாக இவர்களை நெருங்காது.

* வயிற்றுப்போக்கை உருவாக்கும் நோய்க்கிருமிகளை தாய்ப் பாலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி விரட்டியடிக்கிறது.

* நுரையீரல் கோளாறுகள் வருவதும் குறைகிறது.

* உணர்வுபுர்வமாக நிலையானவர்களாகவும், தயாருடன் நன்கு பழகுபவர்களாகவும் இருபபார்கள்.

**சரி தாய்ப்பால் கொடுப்பதால் தாயக்கு எந்தவிதத்தில் நன்மை?**

* குழந்தை பாலை உறிஞ்சிக் குடிப்பதால் வயிற்றுப் பகுதி விரைவிலேயே இயல்பு நிலைக்குச் சுருங்குகிறது.

* இவர்களுக்கு மார்பகத்திலும், கர்ப்பப்பையிலும், எலும்புத் திசுக்களிலும் புற்றுநோய் வருவது குறைவாக இருக்கிறது.

* தாய்ப்பால் தருவதால் விலை கொடுத்து புட்டிப்பால் வாங்க வேண்டிய தேவை இருக்காது.

# சமைத்துச் சுவைப்போம்

## பால் பதா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பால் – | 1 லீற்றர் |
| கோதுமை மா – | தேவையானளவு |
| சீனி – | 1/2kg |
| நெய் – | பொரிப்பதற்கு |
| ஏலக்காய் – | 6 |

***செய்முறை:***

பாலை சுண்டக் காய்ச்சி ஆறவிடவேண்டும். பின் கோதுமை மாவை அதனுள் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு ரொட்டி பதத்துக்குக் குழைக்கவேண்டும். பின் மாவை சிறு சிறு உருண்டையாக்கி வட்டமாகத் தட்டிவைக்க வேண்டும்.

அடுப்பில் தாச்சியை வைத்து அதில் நெய்யை ஊற்றி நெய் சூடானதும் அதில் தட்டிய ரொட்டிகளைப் போட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவேண்டும்.

அதன்பின் சீனியைப் பாகுகாய்ச்சி கம்பிப்பதம் வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி அதனுள் ஏலக்காய்த்தூள், பொரித்த ரொட்டிகளைப் போட்டு பிரட்டி எடுத்தால் சுவையான பால பதா தயார்.

# சேலையை தெரிவு செய்வது எப்படி?



சேலை அணிவதென்றால் தமிழ்ப் பெண்களுக்கு அலாதிப் பிரியம்தான். ஆனாலும் அவரவர் தோற்றத்திற்கேற்ப சேலையைத் தெரிவுசெய்து அணியும் போதுதான் அவர்கள் அழகை மேலும் மெருகூட்டும்.

எனவே, சேலை வாங்கச் செல்லும் முன் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய குறிப்புகள சில இதோ:-

சேலைகளைத் தேர்வுசெய்யும்போது முதலில் என்ன கலா சேலை என்பதை முடிவுசெய்யுங்கள். பிறகு அதன் டிசைனை முடிவுசெய்யுங்கள். அழகான சேலை வாங்க இதுதான் சரியான முறை.

கறுப்பு நிறப் பெண்கள் ‘பளிச்’ கலர் சேலையையோ, பெரிதாகப் பூப்போட்டதையோ தேர்வுசெய்யாதீர்கள். வெள்ளை, மஞ்சள், மஜந்தா போன்ற லைட கலர் சேலைகளும், அதிக பூக்கள் இல்லாமல் புது டிசைன்கள் நிறைந்ததாக இருந்தாலுமே உங்களுக்கு அழகு. நிச்சயம் சிகப்பு வண்ணசேலை எடுக்காதீர்கள்.

நன்கு சிவந்த மேனி உடையவர்கள் ‘பளிச்’ கலர் சேலையில்தான் அதிகம் மின்னுவார்கள். எனவே சிகப்பு, கறுப்பு, பச்சை என எதையும் தேர்வு செய்யலாம்.

அகல உயரமான போர்டர் கொண்ட சேலைகளும், பூக்கள் நிறைந்த சேலைகளும், உங்களை இன்னும் அழகுபடுத்தும். ஜிகினா கல் வைத்த சேலைகளில் நீங்கள இன்னமும் ஜொலிப்பீர்கள்.

சுமாரான நிறம் உடைய பெண்கள் நவநாகரிக டிசைன்கள் உள்ள சேலைக்கு முக்கியத்துவம் தர வேண்டும் கோடுபோட்ட சேலை மற்றும் மச்சிங்கான பிளவுஸ்கள இவ்களுக்கு அழகூட்டும் பளிச்செனத் தோன்றும் சேலைகள் இவர்களுக்கு நன்றாக இருக்காது. லைட்டான கலரே எடுப்பாக இருக்கும்.

பட்டு எடுக்கும்போது அது பற்றித் தெரிந்த சிலரை அழைதது்ச் செல்லுங்கள். கூட்டமாகப போவது குழப்பத்தை ஏற்படுத்தி வடும் விலை கூடுதலாக இருந்தால்தான் புடவை அசத்தல் என்ற எண்ணம் இருந்தால் அதனைக் கைவிடுங்கள். குறைந்த விலையிலும், உங்களை மிளிரச் செய்யும் புடவைகள் உண்டு.

வேலைக்குச் செல்லும்போது லைட் கலர் சேலையும, விருந்து விழாக்களுக்குப் போகும்போது டார்க் கலர் புடவையும், வெயில் காலத்தில் லைட் கலர் சேலையும், மழைகாலத்தில் டார்க் கலர் சேலையும் அணியலாம்.

உயரமான பெண்களுக்கு கோடு டிசைன்களும், குள்ளமான பெண்களுக்கு பூ டிசைன சேலைகளும் மிகுந்த அழகைத தரும்.

நீங்கள் எண்ணத்தில் நினைக்கிற சேலை அனேகமாக எந்தக் கடையில் இருக்கலாம் என்பதைப் பார்த்து அந்தக் கடைக்குச் செல்லுங்கள.

சேலைகளை எடுத்தால் மட்டும் போதாது. அணிவதிலும் கவனம் வேண்டும். நன்றாக அயன்செய்து மடிப்புக் கலையாது உடுத்தப் பழகிக்கொள்ளுங்கள். அப்போது நீங்களும் அழகியாகிவிடுவீர்கள்.

# சமஷ்டிமுறையில் பிரச்சினையைத் தீர்க்க

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத்திட்டம்

## இதற்காக பதவியை இழக்கக்கூடத் தயார் என்கிறார் ஜனாதிபதி

**நாட்டில் அறுபது சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப் படுவதையே விரும்புகின்றனர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வை ஏற்படுத்த



எனது ஜனாதிபதி பதவியை அர்ப்பணிக்கவே தயாராகவுள்ளேன். இந்தத் தீர்வுமுறை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பையோ அல்லது தேர்தலையோ விரைவில் நடத்தத் திட்டமிட்டுள்ளேன்.

கடந்த காலத்தில் எனது அரசு முன்வைத்தது போன்ற தீர்வுப்பொதியை எந்த அரசும் முன்வைக்கவில்லை. அரசாங்கமோ புலிகளோ போரில் வெல்ல முடியாது. யுத்தம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறுபவர்கள் நாட்டின் துரோகிகளாகவே கருதப்படுவர்.

எனது கட்சிக்குள்ளேயே இருந்து என்னை எதிர்ப்பவர்கள் உள்ளார்கள். எனது ஆளும் கூட்டணிக்குள் உள்ள கட்சியினர் என்னை வெளிப்படையாக வசைபாடுகின்றனர். இவர்கள் என்னை கொலை செய்யக்கூட முயற்சிக்கலாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் பயந்து சரியான முடிவெடுப்பதிலிருந்து நான் பின்வாங்கி விடமாட்டேன்.

நாட்டுக்கு வெளிநாட்டு உதவிகள் வரத்தொடங்கிவிட்டன. பொருளாதாரம் மீண்டும் ஆரோக்கிய நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் வெளிநாட்டு உதவிகளை எதிர்த்துக்கொண்டு குரங்குகள் போல குளறும் சில ஆளும்கட்சி வகுப்பினர் வெளிநாட்டு உதவியின்றி நாட்டை முன்னேற்ற முடியும் என்று கனவு காண்கின்றனர் என்று தனதுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு சலுகை அடிப்படையில் எரிபொருள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சலுகை அடிப்படையில் எரிபொருளை வழங்க கடற்றொழில் அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதற்காக ஒருகோடியே 14 இலட்சம் ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது. இதற்கமைய நீண்ட காலமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு மீனவர்களுக்கும் 30ஆயிரம் ரூபா பெறுமதியான எரிபொருள் வழங்கப்படும்.

இதேவேளை, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட எஞ்சின் பொருத்தப்பட்ட படகிற்கு 7 ஆயிரம் பெறுமதியான எரிபொருளும் வழங்கப்படவுள்ளன.

வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட எஞ்சின்கள் பொருத்தப்பட்டபடகுகளுக்கு 5ஆயிரம் ரூபா வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சில் தமது படகுகளைப் பதிவுசெய்து கொண்டவர்கள் மாத்திரமே இச்சலுகையைப் பெறமுடியும்.

கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கான இச்சலுகைக்கான கூப்பன்கள் இம்மாதம் 19ஆம் திகதி விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புத்தளம் ஆகிய மாவட்ட மீனவர்களுக்கான கூப்பன் விநியோகம் இம்மாதம் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

### 1008 கலச அபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா

(யாழ்ப்பாணம்)

உசன் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆயிரத்தெட்டு கலச அபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக் கிழமை நிறைவுபெறவுள்ளது. (க)

### உயர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அந்தோனியார் ஆலய உயர் திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பி.ப.4.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மறுநாள் கலாநிதி சுவாமி ஜே.ஈ.ஜெயசீலனின் நெறிப்படுத்தலில் நற்கருணை விழா இடம்பெறவுள்ளது. ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி உயர் திருவிழா இடம்பெறவுள்ளது. (க)

### மட்டு. இல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைய நாட்களில் 15றகும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கேந்திர ஸ்தானங்களில் விஷேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் தீவிர காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கோட்டை முனைப்பாலம், கல்லடிப்பாலம், பெற்றோலியம் கூட்டுத்தாபனச்சந்தி, புதுப்பாலம் போன்ற இடங்களில் திடீர் சோதனைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவத்தினர் கவச வாகனங்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலைகளில் விஷேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# மொகாலி கிரிக்கெற் டெஸ்ட் பாகிஸ்தான் 312 ஓட்டங்கள்

கிரிக்கெற் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய, இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெற்



போட்டி, நேற்று முன்தினம் இந்தியாவின் மொகாலி நகரில் ஆரம்பமாகியுள்ளது.

ஆறு வருடங்களுக்குப் பின் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளதால்



போட்டி மிகவும் உற்சாகத்துடன் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கங்குலி, ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது என்பதால், முதலில் களத்தடுப்பில் ஈடுபட விரும்பி, பாகிஸ்தான் அணிக்கு முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை வழங்கினார்.


பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸில் சல்மான்பட், தவ்பீக் உமர் ஆகியோர் ஆட்டத்தைத் தொடங்கினர். ஆரம்பத்திலேயே சல்மன்பட் 5ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பில் அசிம்கமால் சிறப்பாக ஆடி



91 ஓட்டங்களை எடுத்தார். அணித்தலைவர் இன்சமாம் 57 ஓட்டங்களையும், உமர். 44 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 20 ஓட்டங்கள் பெறப்பட்டன.

இந்திய அணிசார்பில் பந்து வீச்சில் தமிழக வீரர் லக்ஷ்மிபதி பாலாஜி சிறப்பாக பந்து வீசி 20.4 ஓவர்களில் 76ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். தனது



டெஸ்ட் வாழ்வில் முதன்முறையாக இப்போட்டியில் 5 விக்கெற்றுக்களை அவர் வீழ்த்தியிருக்கிறார்.

இர்பான் பதன், அனில் கும்ளே ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் ஷகீர்கான் 1 விக்கெற்றையும் வீழ்த்தினர். முதல் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் மழைகாரணமாக தேநீர் இடைவேளையின் பின்னரே ஆரம்பமானது.

இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 8ஆவது ஓவரில் விக்கெற் இழப்பின்றி 50ஓட்டங்களை எடுத்திருந்தது ஷெவாக், கௌதம், காம்பீர் ஆகியோர் தொடர்ந்து ஆடுகின்றனர். ஆட்டம் தொடர்கிறது. (க-7)

## ஸ்ரீலங்கா கிரிக்கெற் சபையின் தலைவராக மீண்டும்சுமதிபால

ஸ்ரீலங்கா கிரிக்கெற் சபையின் புதிய தலைவராக திலங்க சுமதிபால மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2005, 2006ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபைத் தேர்வுக்கான நியமனப் பத்திர தாக்குதலின் இறுதிநாளான கடந்த சனிக்கிழமை வரை, இப்பதவிக்கு வேறு எவரும் போட்டியிட விண்ணப்பிக்காத நிலையில், சுமதிபால மீண்டும் இப்பதவிக்கு வந்துள்ளார்.

புதிய கிரிக்கெற்சபை நிர்வாகத்துக்கான தேர்தல் இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தல் மூலம் போட்டிக்குழு, போட்டி ஏற்பாட்டுக்குழு, நடுவர்குழு அனுசரணைக்குழு ஆகியவற்றிற்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

திலங்க சுமதிபாலவுடன் உபதலைவர்களாக திரவர் ராஜரத்னம், அரவிந்தடி சில்வா ஆகியோரும் செயலாளராக ரவீன் விக்கிரமரத்ன, உபசெயலாளராக பந்துல திஸநாயக்க, பொருளாளராக நுஸ்கி முஹம்மது, உப பொருளாளராக லூசியன் பெரின்னகே ஆகியோரும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## விளையாட்டு செய்திகள்

## தலைமை அலுவலகத்தை துபாய்க்கு இடமாற்ற முடிவு

சர்வதேச கிரிக்கெற் சபையின் தலைமை அலுவலகத்தை (ஐ.சி.சி.) இலண்டனில் இருந்து துபாய்க்கு இடமாற்றுவதற்கு முடிவு செய்துள்ளது.

கிரிக்கெற் பிறந்து வளர்ந்த இடம் பிரிட்டன். அதுவும் இலண்டன் லோட்ஸ் மைதானம் கிரிக்கெற் தொடர்பாகப் பாரம்பரியச் சிறப்புமிக்கது. இத்தகைய இடத்தைவிட்டு வெளியேறுவது கவலையை அளிப்பதாக ஐ.சி.சியின் தலைவர் ஈஷான் மானி தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் தொடர்ந்தும் ஐ.சி.சி. தலைமை அலுலகம் செயற்படுவதில் பல பிரச்சினைகள் இருப்பதால், அது எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் துபாய்க்கு இடம்மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் அலுவலகம் துபாக்கு இடமாற்றப்படுவதற்கு அங்குள்ள தொழிலதிபர்கள் பெரும் வரவேற்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

# பிரதமர் பதவியைக் கைப்பற்றுவதற்காகவே ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார் கதிர்காமர்

## பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தான் பிரதம மந்திரியாக வேண்டும் என்பதற்காகவே, முன்னைய ஆட்சியின்போது இனவாதக் கட்சியாகச் செயற்பட்டு தற்போது அரசியல் நீரோட்டத்தில் உள்ள ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமையவே லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பி.யினரும் இணைந்து சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதகங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

மூன்று ஆண்டுகாலமாக அமுலில் இருக்கும் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிக்கும் நோக்கில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவிக்கும் அதேநேரம், அதற்கெதிரான செயற்பாடுகளையே கதிர்காமரும், ஜே.வி.பியினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

இது சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுக்கும் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையிலான தனிப்பட்ட குரோதத்தின் வெளிப்பாடாகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் ஜே.வி.பி.உறுப்பினர்கள் ஆகியோரின் செயற்பாடுகளினால் இன்று யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதுடன், சுனாமி நிதியுதவிகள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகள் என்பனவற்றுக்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன.


உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி தொடர்பில் ஜே.வி.பி. வெளியிட்ட கருத்தே இதற்குக் காரணமாகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராவதுக்கும் அநுரா பண்டாரநாயக்க ஜனாதிபதியாவதற்கும் ஜே.வி.பி.யினர் ஆதரவு வழங்குதாகத் தெரிவித்துள்ள நிலையிலேயே நாட்டைச் சீரழிக்கும் நடவடிக்கைகளும், படுகொலைகளும் இடம்பெற்று வருகின்றன எனவும் பந்துல குணவர்த்தன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-4)

# சொல் ஹெய்ம் - பாலா லண்டனில் பேச்சு

## புலிகளின் விமானப்படை குறித்து ஆராய்வர்

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்



ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை இன்று லண்டனில் சந்தித்துப் பேசுகிறார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் வான் படை விவகாரம் குறித்து அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமர் பொன்டேவிக்கிற்கு கடிதம் எழுதியிருந்தார். புலிகளின் இந்த விசேட படையணி குறித்த தமது உத்தியோகபூர்வ அதிருப்தியையும் ஜனாதிபிதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் அறிவிப்பின் பிரகாரம் அவர் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக ஆராயும் பொருட்டே நோர்வே அரசு தனது விசேட தூதுவரை புலிகளின் ஆலோசகரை சந்திக்க அனுப்பியுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது. ஆனால் இச்சந்திப்பின் நோக்கம் குறித்த உண்மையான தகவல்கள் தெரியவரவில்லை.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் வான்படை விவகாரம் குறித்து அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் கொண்டலிஸா றைஸிடம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எடுத்துக் கூறியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகள் வான்படை அமைத்



திருப்பது, வான் கலங்களை கொள்முதல் செய்திருப்பது, வன்னியில் விமான ஓடுபாதை அமைத்திருப்பது ஆகிய விடயங்கள் இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி சர்வதேச பாதுகாப்புக்கும் பேரச்சுறுத்தலாகும் என்று அமைச்சர் கதிர்காமர் அமெரிக்காவிடம் முறையிட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ந)

## “ஆண்டவரே நீர் உம் மக்கள்மீது இரக்கம் காட்டும்போது என்னை நினைவுகூரும்”



மக்கள் நெருக்கமிக்க சாலை அருகிலேயே ரயில் நிறுத்தம் உள்ளது. அங்கு மக்கள் அவசர அவசரமாக ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு வயதான பாட்டி ஒரு கூடையில் பழங்களை வைத்து விற்றக்கொண்டிருந்தாள். அதுவோ சந்தடிமிக்க இடமாதலால் யாரோ ஒருவர் அந்த பழங்களைத் தட்டிவிட்டு

**தவக்காலச் சிந்தனை**

சென்றுவிட்டார்கள். பழங்கள் இரைந்து ஓடுகின்றன. அந்த மூதாட்டியோ என்ன செய்வது என்று தெரியாது கூடிய மட்டும் விரைந்து பழங்களைப் பொறுக்குகிறாள்.

அப்போது அவசரமாக விரைந்து வந்த ஒருவர் அந்த அம்மாவின் அருகில் வந்து சிதறிக் கிடந்த பழங்களைப் பொறுக்கி எடுத்து கொடுத்து அம்மா பத்திரமாக வையுங்கள் மீண்டும் யாராவது வழங்ளைக் கீழே தட்டிவிடப் போகிறார்கள் என்றார். அதற்கு அந்த அம்மா, ஐயா நீங்கள் கிறிஸ்தவரா? என்றார்கள்.

இங்கே இயேசுவை நினை வூட்டியது இந்த நபரின் மனிதத்தன்மையே. நாம் செய்யும் செயல்களே நமக்குச் சான்று. நல்லது செய்பவர்கள் நன்மையே பெறுவார்கள்.

காவலன்

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அரச சேவையிலுள்ள சிற்றூழியர்களிடமிருந்து பதவி உயர்வுக்கான விண்ணப்பங்களை பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குப் பதவி உயர்வு பெறவிரும்புவோர் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

ஆயினும், மாகாண அரச சேவையில் உள்ள சிற்றூழியர்கள் மேற்படி பதவிக்காக விண்ணப்பிக்க முடியாது.

இதற்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை மார்ச் 4ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(ந-7)

# திருமலையில் நடைபெற்ற மகளிர்தின நிகழ்வில் முறுகல்

(திருகோணமலை)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வில் முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

திருகோணமலை பெண்கள் மேம்பாட்டுப் பேரவையின் மகளிர்தின விழா நேற்று முன்தினம் பி.ப.2.30 மணிக்கு திருகோணமலை கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது.

கலாசார மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் புலிக்கொடியேற்றப்பட்டபோது அங்கு வந்திருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், ஏற்றப்பட்ட புலிக்கொடியினை இறக்குமாறு நிகழ்வினை நடாத்தியோரிடம் கேட்டுக்கொண்டனர்.

இந்தக் கோரிக்கையினை அவர்கள் விடுத்தபோதும் கொடியேற்றப்பட்டது. பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் பொலிஸார் இது குறித்து முறைப்பாடுசெய்து கொடியினை இறக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதுவிடயமாக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனிடம்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கொடியினை இறக்குமாறு கேட்டுக்கொண்டபோது, எழிலன் அந்தக் கொடியினை யார் ஏற்றினார்களோ அவர்களிடம் சென்று அந்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் நீங்கள் தெரிவித்தால் அந்தக் கொடியினை இறக்குவார்கள் எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் அவர்கள் அந்த இடத்துக்கு வந்தபோது கொடியிறக்கப்படாமலே நிகழ்வு அங்கு தொடர்ந்தும் இடம்பெற்றது. இதனால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. (ந-4)

# பிணை மனு நிராகரிப்பு

திருகோணமலை காணி ஆணையாளர் அலுவலக களஞ்சியத்திலிருந்து மின்பிறப்பாக்கிகள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக சந்தேக நபரான உதவிக்காணி ஆணையாளர் நிமால் திஸநாயக்கவின் பிணை மனுவை திருமலை மாவட்ட நீதிபதி நிராகரித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக இந்த 12 மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட மின்பிறப்பாக்கிகள் களஞ்சிய அறையிலிருந்து மர்மமான முறையில் காணாமற்போனமை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் உதவிக் காணி ஆணையாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் கைது செய்யப்பட்டு இரண்டாம் நாள் அனாமதேய தகவல் ஒன்றின் பேரில் களஞ்சிய அறைக்கட்டடத்திற்குப் பின்புறமாக விறகுகளுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இவை கண்டெடுக்கப்பட்டன. இதனையடுத்து நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இவர் தன்னை பிணையில் விடுதலை செய்யக் கோரி மனுவொன்றைத் தாக்கல் செய்தார். நிவாரணப் பொருட்களை உயரதிகாரியொருவர் திருடியிருப்பது பாரதூரமான குற்றச்செயல் என நீதிமன்றம் கருதுவதாகக் குறிப்பிட்டு, இவரது பிணைமனுவை நிராகரித்த நீதிபதி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ப)

# குற்றவாளிகளின் தடுப்புக்காவல் காலத்தை நீடிக்க நடவடிக்கை

பாரியகுற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தடுத்துவைப்பதற்கான கால எல்லையை நீடிப்பது தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

குற்றச்செயல்களின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் காலத்தை 12 நாட்களில் புதுப்பிக்கவேண்டும்.

தொடர்புடைய நீதிபதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதன் மூலம் இக்கால நீடிப்பை மேற்கொள்ளலாமென அரசாங்கம் கருதுவதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் றூமி மர்சூர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாரிய குற்றச் செயல்களைப் புரிந்த சந்தேக நபர்களை தங்காலை சிறைச்சாலையில் இருந்து எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்வதில் பாதுகாப்புப் பிரச்சினைகள் தோன்றியிருப்பதாக இரத்தினபுரி பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா தெரிவித்துள்ளார். (ந-7)

# இன்று ஒரு தகவல்

## புகழ் மயக்கம்

புகழுக்கு மயங்காதவர்கள் யாருமில்லை. இந்த உலகத்தில் ஒருவரைப் பார்த்து இன்னொருவர் சொன்னார் "சார்! இந்த அகில உலகத்திலும் புகழுக்கு மயங்காதவர் நீங்கள் ஒருத்தர் தான் சார்" என்றார். இதைக் கேட்டதும் அவர் "அப்படியா? மிக்க நன்றி" என்று கூறி அசடு வழிந்தார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அதற்கே அவர் மயங்கிவிட்டார் என்று அர்த்தம்.

இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது. இன்னொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது. இவையிரண்டும் ஒரே இடத்தில் இருப்பது அபூர்வமாயிற்றே. பணம் அதிகமாக வைத்திருக்கிறாரே... அவருக்கு ஒரு ஆசை! யாராவது நம்மைப் புகழமாட்டார்களா என்று! பக்கத்திலுள்ள அறிவாளியோ மிகுந்த ஏழை. அவர் பார்த்தார் சரி... இவரிடம் காசு கொடுத்தாவது நம்மைப் புகழ வைப்போம் என்று நினைத்தார்.

அந்த ஏழையைப் பார்த்துச் சொன்னார் "இதோ பார் என்னிடம் 1000 பொற்காசுகள் உள்ளன. அதில் 100 பொற்காசுகளை உன்னிடம் தருகிறேன் நீ என்னைப் புகழ்ந்து பேச வேண்டும். செய்வாயா?" என்று கேட்டார். "இது நேர்மையான பங்கீடு இல்லை. நீங்கள் பங்கு போடுவதில் நேர்மை இல்லாததனால் நான் உங்களைப் புகழ்ந்து பேச மாட்டேன்" என்றார் அவர்.

"அப்படியா சொல்கிறாய்? சரி... அப்படியென்றால் ஆளுக்குப் பாதியாக எடுத்துக்கொள்வோம். என்னிடம் இருப்பது 1000 இதில் உனக்கு 500.எனக்கு 500 இப்படிப் பிரித்துக் கொள்வோம். இப்போதாவது என்னைப் புகழ்ந்து பேசுவாயா?" என்று கேட்டார். இவர் பார்த்தார் "என்னிடம் 500 உங்களிடம் 500 இருந்தால் நாமிருவரும் சமம் என்பது தானே அர்த்தம்? அப்படியிருக்கும் போது உங்களை நான் எப்படிப் புகழ்ந்து பேச முடியும்?" என்றார்.

"சரி நான் வைத்திருக்கும் அவ்வளவையும் உன்னிடம் கொடுத்துவிட்டால் அப்போதாவது என்னைப் புகழ்ந்து பேசுவாயா?"என்று கேட்டார் அவர். "நீங்கள் உங்களிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன். நீங்கள் ஏழை ஆகிவிடுவீர்கள். செல்வந்தனான நான் ஒன்றுமேயில்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவேன்?" என்றார். இவர் அதுவும் நியாயம் தானே! ஒன்றுமில்லாதவனைப் புகழ்ந்து என்ன ஆகப் போகிறது?

இப்போது தான் அந்தப் பெரிய மனிதன் யோசித்தார்! நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயிலிருந்து புகழ்மொழிகளை வாங்க முடியாது என்று புரிந்து கொண்டார்.

புகழ் மொழிகளை விலைக்கு வாங்கிவிட முடியாது. அப்படி வாங்க வேண்டும் என்று நினைத்தால் அதனால் எந்தப் பயனுமில்லை. புகழ் என்பது தானாக வந்து சேர வேண்டுமென்றால் அதற்குத் தகுந்த மாதிரி நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் அதுதான் முறை. அதை விட்டுவிட்டு காசு கொடுத்துப் புகழ வைப்பதோ... கடதாசியில் அச்சடித்து சுவரில் ஒட்டுவதோ... எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்று நினைக்கிறீர்கள்?.

ஒருவர் அப்படித்தான் ஒரு சுவரில் பெரிய போஸ்டரை ஒட்டிக்கொண்டிருந்தார். அருகில் போய் அந்த போஸ்டரில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். "பிறந்த நாள் காணும் பெரியவரே நீங்கள் வாழ்க பல்லாண்டு" என்று எழுதியிருந்தது.

நான் அந்த ஆளைப்பார்த்து "நீங்கள் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும் என்றால் நேராக அந்தப் பெரியவரைப் பார்த்து சொல்லக் கூடாதா? இப்படி இந்த சுவரில் உங்கள் வாழ்த்தை பசை பூசி ஒட்டுகிறீர்களே நீங்கள் இப்படி ஒட்டுவது அந்தப் பெரியவருக்குத் தெரியுமா?"என்று கேட்டேன். "தெரியும்" என்றார். "எப்படி" என்றேன். "அந்தப் பெரியவரே நான்தானே!" என்றார் அந்த ஆள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## சிவராத்திரி தினத்தன்று மொறட்டுவவில் அதிசயம்!

(மொறட்டுவ)

கல்கிபகவான் மற்றும் பத்மாவதி ஆகியோரின் திருவுருவப் படங்களிலிருந்து சந்தனம், குங்குமம் என்பன சொரிந்து கொண்டிருக்கின்றது.இந்த அதிசய சம்பவம் சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் மொறட்டுவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் அதிசய நிகழ்வு இடம்பெற்றதாகக் கூறப்படும் அந்த வீட்டின் உரிமையாளா இதுகுறித்துத் தெரிவிக்கையில்,சிவராத்திரி பூஜை செய்வதற்குத் தயாராக இருக்கின்ற போது பிற்பகல் அளவில் பகவானின் நெஞ்சில் சந்தனமும், பத்மாவதி நெஞ்சில் குங்குமமும் ஒரு ரூபா குத்தி அளவில் தெரிந்தன. அப்போது நாம் அயல்வீட்டுக்காரரையெல்லாம் அழைத்து இவ் அதிசயத்தைக் காட்டினோம். அவர்களும் இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது நெஞ்சுப் பகுதியிலிருந்து சந்தனமும் குங்குமமும் கீழே சொரிந்தன என்றார்.

பெருமளவான மக்கள் இந்த அதிசய நிகழ்வைப் பார்ப்பதற்காக அவ் வீட்டைச் சூழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றன. (ற-8)

# யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயார்

## திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

வலிந்து எம்மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராகவுள்ளோம்.

அதற்கான பலத்துடனும் நாம் இருக்கின்றோம். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை. சந்தர்ப்பததை சரியாக பயன்டுத்துவதில் நாங்கள் குறியாக இருக்கின்றோம்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தொிவித்தார்.

திருகோணமலை மாவட்ட மக ளிர் மேம்பாட்டுப் பேரவையினரின் சர்வதேச மகளிர் நாள் விழா இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி கண்மணி இரத்தினவடிவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருண்யா தமிழீழத் தேசியக கொடியினை ஏற்றிவைத்தார். இங்கு சிறப்புரையாற்றிய சி.எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில், போர் வரக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இன்னொரு யுத்தம் இந்நாட்டில் ஏற்பட்டால் இலங்கைத் தீவு சுடுகாடாகிவிடும். இதற்கு சிங்கள மக்களுக்கு சிங்கள அரசியல்வாதிகள் பதில் கூறியாகவே வேண்டும். ஆயுதங்களைத் தொடர்ந்து தாங்கி நிற்கும் நிர்ப்பந்தம் எமக்கு இல்லை.

இலங்கைப் படையினருக்கோ அவர்கள் ஓய்வு பெறும் வரை ஆயுதங்களைத் தாங்கி நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. நாங்கள் எமது மக்களின் விடுதலைக்காகவே ஆயுதங்களைத் தூக்கியவர்கள்.



எமக்கு விரைவாக மாற்றம் தேவை. விரைவாக போராடி தீர் விணைப பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு இருப்பதா லேயே நாங் கள் போராட்டத்தின் பால் தள்ளப்பட்டோம். இலங்கை ஜனாதிபதியும் ஜே.வி. பியினரும் இணைந்து எங்களை ஏமாற்றிக் கொண் டிருக்கின்றார்கள். முன் னைய ஆட்சியா ளர்கள் விட்ட தவறே இந்தப் பிரச் சினை தீர்க்கப்படாமல் இருப் பதாகவும், இதனை விரைவில் தீர்க்கப்போவதாக ஜனாதிபதி தெரிவிக்கும் போதெல்லாம் அதனை ஜே.வி. பியினர் எதிர்க்கும நடைமுறையினைத்தான் கொண் டிருக்கின்றனர்.

அவர்கள் தங்களுக்குள் ஒரு இணக்கப் பாட்டைக கொணடு அதனை வெளியுலகிற்கு எதிர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் தனதுரையில் குறிப்பிட்டார். (ப)

## சுனாமி- 'தமிழ்நாட்டு அனுபவம்' குறித்த பத்திரிகையாளர் மாநாடு

(கொழும்பு)

சுனாமிப் பேரலைத் தாக்கம் தொடர்பாக "தமிழ்நாட்டு அனுபவம்" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின அரசாங்க செயலாளர் சாந்த சீல நாராயணர் மறறும் நாகபட்டின ஆட்சித் தலைவர் ஜே. ராதாகிருஷ்ணன் ஆகியோர் தமது சுனாமி அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்த அனுபவங்களை இந்த மாநாட்டில் பகிர்ந்து கொண்டனர்.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைச் செயலகத்தின் அழைப்பையேற்று இவர்கள் இலங்கை வந்துள்ளனர். சுனாமி அனர்த்த நிவாரண நடவடிக்கை மற்றும் புனரமைப்புப் பணிகளில் பணியாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்தும் இச்சந்திப்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அனர்த்த முகாமைத்துவ நடவடிககைச் செயலகத்தின் தலைவர் மனோதித்த வெல கருத்து வெளியிடுகையில்,

கரையோரப் பாதுகாப்பு எல்லை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமென்று குறிப்பிட்டார். (ற-8)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலே வெற்றி பெறுவாராம்

(புத்தளம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித்தரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புத்தளம் நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்படும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் முறுகல் நிலையில் உள்ளது.

இந்நிலையில் ஜே.வி.பி இனப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்துடன் முரண்பட்டுள்ளது. இதன் காரணமாக ஜே.வி.பியை ஆட்சியில் இருந்து ஒதுக்கி விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆட்சிப் பங்காளியாக ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிகளை எடுத்து வருகிறார்.

எனினும், இது ஜனாதிபதிக்கு ஆட்சி நீடிப்பு வாய்ப்பை வழங்கமாட்டாது எனவும் சுட்டிக்காட்டினார். (ற-4)

# கிழக்குப் படுகொலைகளுக்கு ஆயுதக் குழுக்களே காரணம்

## மட்டு.அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம பெற்று வரும் படுகொலைகள் அனைத்தும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெறுகின்றன.



இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

நேற்று லண்டன் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழலில் அதாவது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலே ஆயுதங்கள் பல ஆயுததாரிகளிடம் இருக்கின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்கள் பொதுமக்களிடம் இருகின்றது என்பதனை நாங்கள் அறியக்கூடியதாகவுள்ளது.

இநத ஆயுதங்கள் அப்படி இருந்தும் நாங்கள் அதனை மீட்டெடுத்திருக்கின்றோம். அந்த ரீதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதங்கள் சில சுயநலன்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை நாங்கள் அறிகின்றோம். அதைக் கட்டுப்படுத்துவதற்கு எங்களாலான முயற்சிகளை நாங்கள் எடுத்திருக்கின்றோம் என்றார்.

இதனை இராணுவக்கட்டுப்பட்டுப் பகுதியில் சிவில் நிர்வாகத்தை செய்கின்ற பொலிஸாரும், இராணுவமும் கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் இந்தச் சம்பவங்களை,ஆயுதப்புழக்கத்தை பாராமுகம் காட்டி அதனை ஊக்குவிப்பது, அதனைத் தூண்டி விடுவது போல் அவர்கள் நடைமுறை இருப்பது போல் தெரிகின்றது என பானு குற்றம்சாட்டினார்.

அண்மையில் வெலிக்கந்தைப் பகுதியில் 6பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என எம்மீது குற்றம்சாட்டுகின்றனர்.

இது உண்மையாகவே வேதனைக்குரிய விடயம். நாங்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, தமிழ் மக்களாக இருந்தாலும் சரி, சிங்கள மக்களாக இருந்தாலும் சரி பொதுவாழ்க்கையில் ஈடுபடுகின்ற எந்த மக்களும் இப்படியான அனர்த்தத்துக்கு உட்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயம். இதனை நிறுத்துவதற்கு அந்தப் பகுதியில் உள்ள ஆயுததாரிகள உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும. ஆயுதங்கள் களையபபட வேண்டும். இதனைப் படைத தரப்புச் செய்யலாம். இதனை ஏன் அவர்கள் விட்டுக் கொண்டிருக்கிறாகள் என்பதை எங்களால் அறிய முடியவில்லை.

ஒரு சூட்டுச் சம்பவம் நடைபெற்றவுடன் அது புலிகளாலேயே செய்யப்பட்டது என இராணுவம் கூறிவிடும். உணமையிலே இந்த நிலை மாறவேண்டும். உடனடியாக என்ன நடந்தது என்று இராணுவ உயர் அதிகாரிகள் கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ச-4)

# சுனாமியால் பாதிப்படைந்தோருக்கு உதவ கியூடெக், செடெக் நிறுவனங்கள் முன்வருகை

*** வீடிழந்தோருக்கு தற்காலிக வீடுகள்**
*** வர்த்தகர்களுக்கு கடனுதவி**
*** மீனவர்களுக்கு தொழில் உபகரணங்கள்**
*** அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி**

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனமும் டெக் நிறுவனமும் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

இந்நிறுவனங்கள தறபோது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றது.

சுனாமி அனர்த்தினால் வடுகளை இழந்தவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை இவை செயல்படுத்தி வருகின்றன.

இந் நிறவனங்கள் மொத்தம் 2ஆயிரத்து 500தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன. இதில் தற்போது அமைககப்பட்டுவரும வீடுகளின் நிர்மாணப் வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாக செடெக் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் றோலன்ட் வான் ஹாஎவர் எமஹறீன் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில தெரிவித்தார்.

மேலும் அவர் இத்திட்டம் குறித்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியில் 192 நாடுகளில் செயற்பட்டுவரும் செடெக் நிறுவனம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பண்பாடு, கலாசாரம் மற்றும் மனிதநேயங்களை கட்டியெழுப்புவதை குறிக்கோளாக் கொண்டுள்ளது.

அத்துடன், எமது நிறுவனமானது வீடுகளை அமைத்துக் கொடுப்பதை மட்டும் நோக்கமாக கொண்டிராமல் சுனாமி அனர்த்த்தினால் பாதிக்கபபட்ட 1000 மீனவக் குடும்பங்களுக்கு வலைகள், கட்டுமரங்கள், இயந்திரங்கள் போன்ற தொழில் உபகரணங்களை வழஙகுவதற்குமுன் வந்துள்ளது. இவர்களுக்கு வழங்கப்படும் இயந்திரங்கள் ஐரோப்பிய நாடொன்றில இருநது கொணடு வரப்படவுள்ளது.

மேலும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கும் எமதுநிறுவனம் கடன் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கமைய பாதிக்கபபட்ட வர்த்தகர்கள் எவராயினும் இருந்தால் அவர்கள் எந்த இடத்தில், எவ்வாறான பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர் போன்ற உண்மைத் தகவலுடன், கிராம சேவகர், பிரதேச செயலர் ஊடாக இழப்பை உறுதிப்படுத்தி கியூடெக் நிறுவனத்திடம் தொடர்பு கொண்டால் ஆகக் கூடியது ஒரு மில்லியன் ரூபா வரை தவணை அடிப்படையில் கடன் வழங்கப்படும். இக்கடனைப் பெறும் வர்த்தகர்கள் தமது கடன் தொகையை இரண்டு வருடமோ அல்லது மூன்று வருடமோ கழித்து திருப்பி வழங்கவேண்டும்.

மேலும், எமது அமைப்பானது சுனாமி அனர்த்தினால் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கும உதவிகளை வழங்கவுள்ளதுடன், உளரீதியாகப்பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் முன்வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேற்படி பத்திரிகையாளர் சந்திப்பில்கியூடெக் நிறுவனத்தின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி அந்தோனிமுத்துவும் கலந்துகொண்டார். (ற-19)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அந்தோனியார் ஆலய 2005 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுக்கூடடம் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக அ.பி.குணசீலனும், உபதலைவராக நீ.ச.சேவியரும், செயலாளராக சு.யோகராசாவும், உப செயலாளராக சு.பழனிநாதனும் பொருளாளராக மே.வசந்தகுமாரும், பொதுச்சபை பிரதிநிதிகளாக சூ.எட்மன், கா.அண்ணாமலையும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# நாட்டை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்திற்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்குவதில்லை

## அமைச்சர் அனுரா பண்டார நாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டை மீளக்கட்டி எழுப புவதற்கு எதிர்க்கட்சியிடம் இருந்து போதுமான ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுராபண்டார நாயக்க குறறஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இடம் பெறும் பேச்சுவார்த்தைகளிலும் எதிர்க்கட்சி கலந்து கொள்வதில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பலாங்கொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீடமைப்பு செயற்திட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டின் தலைவி என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தையில் கலநதுகொள்ளுமாறு அனைத்து அரசியல்கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்ததாகவும் ஆனால் இரண்டு பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டு விட்டு பின்னர் ஐக்கிய தேசிய கட்சி பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுவது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாது விட்டாலும் அரசாங்கம் எனற அடிபபடையில தாம செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டை மீள கட்டியெழுப்பும் நடவடிக்கைக்காக எதிர்க்கட்சி முன் வைதத யோசனைகளை அரசாங்கம் கருத்தில் கொள்வது இல்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதேச மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

எனவே அனுரா பண்டார நாயக்க தெரிவித்த இந்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பாரிய அளவிலான அபிவிருததி செயற்திடடங்களை நடைமுறைப்படுத்தாது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் குறுகிய கால செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இருந்து எடுக்கப்படும் தீர்மானங்களை அரசாங்கம் கிராமிய மடடத்தில் செயற்படுத்துவது இல்லை எனவும் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டினார். (க-9)

# ஆசிரிய நியமன நேர்முகப் பரீட்சை இன்று திருகோணமலையில் ஆரம்பம்

(கொழும்பு)


நாட்டிலுள்ள தேசிய கல்வியற் கல்லூரிகளில் கல்வியியல் டிப்ளோமாப்பட்டம் பெறற 268 தமிழ்மொழிமூல டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றுமுதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

திருகோணமலை வ.கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுவதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம, உடற்கல்வி ஆகிய துறைகளில் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்கள் இம்மாகாணத்திலுள்ள கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் ஏப்ரல் மாத்தில் ஆசிரியர்களாக் நியமிக்கபபடுவாாகள்.

அதேவேளை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பாடசாலையில் சித்தியடைந்தவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 612 பேர் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1000 ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் மிகுதியாக உள்ள 388பேரின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (க-7)



# பிரதான வீதிகளை புனரமைக்க பொதுமக்கள் உதவ வேண்டும்

## சுரேஷ்.எம்.பி.கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் வாகன நெருக்கடி, அதனால் ஏற்படும் வீதிவிபத்துக்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு முல்லைத் தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள பிரதான வீதிகள்விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

எனவே இதற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்சுரேஷ் பிரேமச்சந்திரன் பொதுமககளைக கேட்டுளளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, யாழ்ப்பாண பிரதேசத்து வீதிகளை பார்வையிட வருகை தந்த வீதி அபிவிருதது சபைத் தலைவரை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பனர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னரே பொது மக்களிடம் இவ்வாறுகோரிக்கை விடுத்துள்ளார்.

ஏ-9 வீதியின் இன்றைய நிலை தொடர்பாகவும் யாழ்ப்பாணத்தில இருக்கக்கூடிய முதலதர வீதிகள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறைவீதி, காங்கேசன துறை வீதி, பலாலி வீதி, மானிப்பாய் வீதி, பண்ணை வீதி, ஆகிய்வற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்கப்பட்டதுடன், வாகனங்கள் மூன்று மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில் வீதிகள அகட்டபபட்டு, இரண்டு வாகனங்கள் சுலபமாக செல்லக் கூடிய வீதிகளாக இவை மாற்றப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்களை பூரணமாக ஏற்றுக்கொண்ட வீதி அபிவிருத்திச் சபைத்தலைவர் எதிர்வரும் காலங்களில் மேற்கண்ட சகல விடயங்களும் கவனத்திலெடுத்து வீதிகள் அமைக்கப்படும் என உறுதியளித்ததுடன், யாழ். பருத்தித்துறைவீதியும், இன்னொரு வீதியும் இந்த வருடம் புதிய தொழில் நுட்பத்திற்கிணங்க புனர்நிர்மாணம் செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

ஆனால் இவ்வீதிகள் அகட்டப்படும் பொழுது பொதுமக்களின் ஒத்துழைப்பு முக்கியமானதென வீதிஅபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்தார். வீதிகள் அகட்டப்படுவதற்கும், மழைநீர் வழிந்தோடுவதற்கும் ஏதுவாக தேவையான இடங்களில் பொதுமக்கள் தமது வேலிகளை நகர்த்து உதவி செயதால காலதாமதமில்லாமல் தமது பணிகளைச் செய்ய முடியும் எனவும் அவரால் கூறபபடடது. (க)



புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா மங்கள விளக்கேற்றுகிறார். அருகில், பாடசாலை அதிபர்க.தர்மகுணசிங்கம் நிற்பதனையும் பாடசாலை இல்லக் கொடிகள் ஏற்றப்படுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:புங்குடுதீவு செய்தியாளர்)*

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் - குறள்

வலம்புரி

# அடேங்கப்பா ஜனாதிபதியா பேசியது

சமஷ்டி முறையில் தீர்வுகாணப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சூளுரைத்துள்ளார். சர்வதேச மகளிர்தினமான நேற்று முன் தினம் மார்ச் 8ம்திகதி ஜனாதிபதியால் மேற்போந்த முடிபு பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரத்திற்கு நேரம் மாற்றிப்பேசுவதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு இணை அவரேதான். அதிலும் ஆவேசம் அல்லது அதிக புளுகு ஏற்பட்டுவிட்டால் போதும் அவரின் பேச்சை சொல்லவும் வேண்டியதில்லை.

அவருக்கு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டால் 'இருபத்து நாலு மணிநேரத்திற்குள் இராணுவநடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளை மீட்டுவிடுவேன்' என்பார்.

அடக்கமுடியாத புளுகு ஏற்பட்டுவிட்டால் மயான காண்டத்தில் அரிச்சந்திரன் பேசியதுபோல் 'எது வரினும் வரட்டும்...' என்றவாறு யார் எதிர்த்தாலும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகண்டே தீருவேன் என்பார். இவ்வாறு நேரம் ஒரு கதை பேசும் அம்மையார், சர்வதேச மகளிர் தினத்தில் உரையாற்றும் போது, எந்த பைத்தியகாரர் எதிர்த்தாலும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு கண்டே தீருவேன் என முழங்கியுள்ளார்.

அவரின் முழக்கம் மழையாகக் கொட்டுமா அல்லது வெறும் முகில்கூட்டமாக காட்சிதந்து கலைந்துபோகுமா என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டிய ஒன்றல்ல.

அன்று முதல் இன்று வரை அவரின் சூளுரைகள் என்னவாயிற்று என்பதை மக்கள் நன்கு உணர்வர். மூன்று ரூபாவிற்கு பாண் கொடுப்பேன் என்று கூறிய ஜனாதிபதி இப்போது என்னவிலைக்கு பாண் தருகிறார் என்பது தெரியும் அல்லவா?

படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வரை மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவரை வழங்குவேன் என்று உறுதியளித்த அம்மையார் அதனை அடியோடு மறந்துபோனது தெரிந்த-பழங்கதை.

ஆக, இப்போது கூறியிருக்கும் சமஷ்டித் தீர்வு மட்டும் நடக்கவா போகிறது. சும்மா போங்கையா போங்க என்று அடித்துக் கூறிவிடலாம் எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறிய விடயம் பற்றி ஆராய்வது இன்றியமையாததாகும்.

அதாவது, எந்தப் பைத்தியகாரார்கள் எதிர்த்தாலும் சமஷ்டி முறையில் தீர்வுகாண்பேன் என ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படியானால் அவர் கூறிய பைத்தியகாரர்கள் யார் என்பதே இப்போது அரசியலில் எழுந்துள்ள பலமான கேள்வியாகும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியினரையே அவர் பைத்தியகாரர் என கூறியுள்ளார் என எடுத்துக்கொண்டால் அது பொருத்துடையதாக அமையாது.

ஏனெனில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைநடத்திய ஒரு கட்சியைப் பார்த்து எதனையும் எதிர்க்கும் பைத்தியகாரத்தனம் எனக் கூறுவது நியாயப்பாடாகாது அப்படியானால் அவர் யாரை பைத்தியகாரர்கள் என்று கூறினார் என உன்னிப்பாக ஆராய்ந்தால் அது ஜே.வி.பியினராகவே இருப்பர் என்ற முடிபுக்கு வரலாம்.

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால சபைத் திட்டவரைபின் அடிப்படையில் ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்தினால் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளுவோம் எனக் கூறுவது ஜே.வி.பியே.

இவ்வாறு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தடையாக இருக்கக்கூடிய ஜே.வி.பியையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பைத்தியக்காரர்கள் எனக் கூறியுள்ளார். அப்படியானால் ஜே.வி.பிக்கும் அரசுக்கும் இடையில் முறுகல்நிலை முற்றி பழுத்துவிட்டது என்பதே பொருள். ஆபத்தில் இருந்து மீள்வதற்காக பற்றிக்கொண்ட தடியே ஆபத்தாகி விடும் நிலையில் ஜே.வி.பியைப் பார்த்து ஜனாதிபதி கூறிய வர்ணனைக்கு நாமும் ஒருதடவை சபாஷ் கூறிக் கொள்ளலாம்.

## யாழ். பல்கலைக்கழக

# இறுதி வருட மருத்துவபீட மாணவர்கள் நேற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டம்







(யாழ்ப்பாணம்)

இடை நிறத்தப்பட்டுள்ள சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கக் கோரி யாழ். பல்கலைக் கழக இறுதிவருட மருத்துவபீட மாணவர்கள் நேற்றும் யாழ் பல்கலைக்கழக பிரதான வாயில் முன்பாக தொடர் பகிஷ்கரிப்புப போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் கடந்த 7ஆம் திகதியும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் இவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததினால் நேற்றும் இவர்கள் தொடர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன், நேற்றுக் காலை இவர்கள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தரின் அலுவலகத்திற்கு முன்பாகவும் பதாதைகளைத் தாங்கிய வண்ணம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இறுதியாண்டு மாணவப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வழமையாக ஏனைய பல்கலைக்கழகங்களில் மருத்துவபீட மாணவர்கள் தமது கல்வியை விரைவாகப் பூர்த்தி செய்து வெளியேறுகிறார்கள்.

ஆனால் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களை அவர்களுடன் ஒப்பிடுகையில் காலந்தாழ்த்தியே கல்வியை முடித்து வெளியேறுகிறார்கள்.

தற்போது போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஏனைய பல்கலைக் கழகங்களைப் போல் விரைவாகக் கல்வியை முடித்து வெளியேறும் வாய்ப்பு உள்ளபோதும் அதற்கு இடையூறாக சத்திர சிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகள் கடந்த மூன்று மாத காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்டுள்ள சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்க துணைவேந்தர் முன் வர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(ந-19)

# என்றுமில்லாதவாறு பாரிய சவால்களை நாடு தற்போது எதிர்நோக்கியுள்ளது

## சுட்டிக்காட்டுகிறார் ஜே.வி.பி. தலைவர்

(கொழும்பு)

நாடு என்றுமில்லாதவாறு இன்று பாரிய சவாலை எதிர் நோககியிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீறறர் ஹரோல்ட் அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்களின் மூலம் இந்தச் சவால்களின் அளவு தெளிவாக தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சோசலிஸ பெண்கள சங்கம் மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி நிதி பீற்றர் ஹரோல்டின் கூற்றானது அரசாங்கம் தெரிவிகக வேண்டிய கூற்று. இன்று அந்தக் கூற்றை உலக வங்கியின் பிரதிநிதி பேசியிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இத்தகைய நெருக்கடியானசவால்களையே தற்போது நாடு எதிர் நோக்கியிருக்கின்றது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ந-4)



# இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றும் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்

## -ம.உ.ஆ.குழுத் தலைவர் ராதிகா குமாரசுவாமி

(மன்னார்)

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்ற பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான சட்டம் இலங்கையில இல்லையென்று இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் தலைவர் ராதிகா குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர வர்த்தகத்துறையில் தோட்டத்துறைகளிலும் வெளிநாடுகளிலும் பணிபுரிகின்ற பெண்கள் நாட்டின் பொருளாதாரததுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனவே தொழில் புரியும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்துக்குத் தேயிலை முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. தேயிலை உற்பத்தித் தொழில் துறையில் 80 சதவீதமான பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பெருந்தோட்டத்துறையைப் போன்று ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட சுதந்திர வர்த்தக வலயத்திலும் அதிகளவான பெண்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தவிர அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் 65 சதவீத பெண்கள் வெளிநாடுகளிலும் தொழில் புரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

## சாயி அருளமுதம்



மனிதனிடம் ஏராளமான உடையும், உணவும், வீடுகளும் இருக்க நேரிடினும் அவனுடைய இதயம் ஈரமற்றதாகவும் உள்ளம் அந்தகாரமாகவும் இருக்கக்கூடும். நிலம், பணம், வீடுகள் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க புலனடக்கம், தன்னம்பிக்கை, திருப்தி, துவேஷமும் பேராசையுமற்றிருத்தல் முதலாய செல்வங்கள் மிகக் கூடிய மதிப்பு வாய்ந்தவையாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# ஆட்டோ சாரதி சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைக்கு அருகிலுள்ள கிரிமிச்சையில் நேற்று முன்தினம் பிற்பகல் இனந்தெரியாத நபர்களினால் வழிமறித்து அழைத்துச்செல்லப்பட்ட முஸ்லிம் ஆட்டோ சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அப்துல் ஹமீட் ரஹீம் (வயது 25) என்பவரே சுடப்பட்டவராவார்.

நேற்றுக் காலை அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் இருவர் விடுதலைப்புலிகளுடனான சந்திப்பொன்றுக்காக இவரது ஆட்டோவை வாடகைக்கு அமர்த்திச்சென்றதாகவும், சந்திப்பு முடிந்து திரும்பும் வழியில் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்த ஆட்டோவை வழிமறித்த ஆயுததாரிகள் சாரதியை ஆட்டோவுடன் அழைத்துச் சென்றதாகவும் அழைத்துச் சென்ற சில நிமிடங்களில் வெடிச்சத்தம் கேட்டதாகவும் பயணம் செய்த இருவரும் தமக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்ததாகவும் இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-4)

## ஓமந்தைச்...

உலங்குவானூர்தியை கிளிநொச்சிக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் மாலை 5 மணி வரையிலும் உலங்குவானூர்தி கிளிநொச்சிக்குச் செல்லவில்லை.

அதன்பின்னர் ஏ-9 வீதிவழியாக வாகனங்களில் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியைச் சென்றடைந்த தமிழ்ச்செல்வன குழுவினர் அங்கிருந்து உலங்குவானூர்திமூலம் மாலை 7 மணியளவில் கொழும்பைச் சென்றடைந்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான இக்குழுவில் தமிழீழ காவல துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (த-04)

## பொதுமக்களை...

நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் துப்பாக்கிகளை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் ஆஜர்ப்படுத்தப்படாமல் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளமுடியாது எனத் தெரிவித்த நீதிவான், சந்தேக நபர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ச-19)

# தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்க சதிச் செயல்

## மட்டு. அரசியல்துறை அறிக்கை

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திலுள்ள கிரிமிச்சையில் முஸ்லிம் ஓட்டோ சாரதியான 'அப்துல்ஹமீட் ரஹீம் அண்மையில சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இராணுவம் இருப்பதாக விடுதலைப் புலிகளினால் குற்றம்சாட் டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று மாலை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டஅரசியல் துறை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிரிமிச்சைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ள சம்பவம் எங்களுக்கு மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது.

தமிழ் பேசும் சகல மக்களும் ஒற்றுமையாக இருந்த பொற்காலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று இருதரப்பும் மிகுந்த பிரயாசத்துடன் முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளையில் இப்படியான தடைகளை ஏற்படுத்தி இலாபமடைய நினைக்கும் பேரினவாதிகளின் கைங்காரியமே இதுவென்பதில் எவ்வித சந்தேகமில்லை.

இப் படுகொலையில் இலங்கை படைத்தரப்பின்கைவேலையும் இருப்பதாகச் சந்தேகிக்கின்றோம்.

முன்பு நிகழ்ந்த சம்பவங்களையும் தற்போது சம்பவம் நடந்த முறைரீ, இடம், நேரம் போன்றவற்றையும் ஒப்பிடும்போது அந்த சந்தேகம்மேலும் வலுவடைகின்றது.

தமிழ் பேசும் சமூகம் இந்த நிகழ்வை மிகக்கவனமாக கையாள வேண்டும். அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டு குற்றம் இழைத்தவர்களை சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இந்தத் தருணத்தில் இப்படியான ஒரு நிகழ்வைச் செய்வதால இலாபமடையக் கூடிய தரப்பு பேரினவாதிகள் மட்டுமே என்பது சிந்திக்கத் தெரிந்த எல்லோருக்கும் புரியும். நெஞ்சை உருக்கும் இந்த சம்பவத்தில் உயிரிழந்த சகோதரரின் குடும்பத்தினருக்கும் உறவினர்கள் நண்பர்களுக்கும் விடுதலைப் புலிகள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றனர்.

இந்த படுகொலையை செய்தவர்களின் கபட நோக்கம் நிறைவேற விடவேண்டாம் என்று மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் துறைஅனைவரையும் இறைஞ்சிக் கேட்டுக் கொள்கின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(த.4)

## ஓ.எல்...

என தெரிவித்தார்.

பரீட்சை வினாத்தாள் மதிப்பிடும் பணிகள் ஏற்கனவே நிறைவு பெற்றுவிட்டன. தற்போது அவற்றை கணினி மயப்படுத்தும் வேலைகள் இடம்பெற்றுவருவதாகவும், அப்பணிகள் நிறைவுபெற்றதும் பெறுபேறுகள் உடனடியாக வெளியிடப்படும் என்றும் மகிந்த விஜயசிறி தெரிவித்தார். (த-04)

## உத்தியோகபூர்வ...

'சட்டரீதியானது அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமற்ற நாடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசம் உள்ளதென பீற்றர் ஹரோல்ட் தெரிவித்ததால் பெரும சர்ச்சை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## இல்ல மெய்வன்மைத் தேர்வு

யாழ்.புனித றோக்ஸ் றோ.க வித்தியாலய இல்ல மெயவன்மை தேர்வு இன்று பிற்பகல் 2 மணிக்குச் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் எ. அருள்தாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## அம்பாறை வீதி மறியல்போர்....

பிரதேசங்களுக்கு விஜயம்செய்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது அவர் அளித்த உறுதிமொழியினையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கான மாற்றுக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய காணிகள் அடையாளம் காணப்பட்டு உரியவர்களிடம் சட்டரீதியாக பெறும் நடவடிக்கைகள் இருவார காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படும்.

அதன் பின்பு நிரந்தர குடியிருப்பு வசதிகள், மக்களின் கருத்துக்கள் பெற்று அமைககப்படுமென அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 15 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. கடல் பாதுகாப்பு வலயத்தை 200. மீற்றரிலிருந்து 100 மீற்றராகக் குறைப்பதன்மூலம் காணி தொடர்பான பிரச்சினைக்கு இலகுவான தீர்வொன்றைக் காண முடியும் என பொதுமக்களினால் யோசனையொன்று முன்வைக்கப்பட்ட போதிலும் இது தொடர்பான முடிவுகளை அரசாங்கம்தான் எடுக்கவேண்டும் என அரசாங்க அதிபர் பதிலளித்தார். (ச)

## பரிசளிப்பு விழா

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவின் 54வது அகவையை ஒட்டி தேவா பொன்விழாச்சபையால் நடாத்தப்படும் பரிசளிப்பு விழாவும், மருத்துவ சேவைக்கு நிதி வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 4மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபரும், தேவா பொன விழாச்சபை உபசெயலாளருமான க.கனகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையை ஏ.ரி.சி அதிபர் இரா. அருட்செல்வம் வழங்கவுள்ளார். தொடக்க உரையினை தேவா பொன்விழாச் சபை அமைப்பாளர் ஞான திருக்கேதீஸ்வரனும் வாழ்த்துரையினை வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர். (ச)

## மனிதஉரிமை ஆணைக்குழுவின்...

பயிலுநர்களாக தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி நெறியினை முடித்த பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து அவர்கள் இருவரும் கடந்த 25 ஆம் திகதி இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டினை அடுத்து மனித உரிமை ஆணைக்குழுவினர் இது தொடர்பாக விசாரணைகளை மேற கொண்டனர்.

இவர்கள் இருவரினதும் பெயர்களும் கல்வி அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டபோதும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. இதனாலேயே நியமனம் வழங்கப்படவில்லை என்று விசாரணைமூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளின் பயனாக கடந்த 7 ஆம் திகதி அவர்கள் இருவருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (த-19)

## யுத்தநிறுத்த காலத்தில்...

நேற்று அவசரமாகக் கூடிய பாதுகாப்பு அமைச்சின் விசேட கூட்டத்திலேயே இந்தவிவகாரம் தீவிரமாக ஆராயப்பட்டிருக்கிறது. இந்த விசேடமாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மேலும் கருத்து தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இரண்டு விமானங்களையும் கொண்டு கொழும்பின் அரவாசிப்பகுதியை ஒருகண நேரத்தினுள் அழித்துவிடமுடியும்.

இந்த இரண்டு வானூர்திகளும் விடுதலைப் புலிகளுக்கு யுத்த காலத்தில் கிடைக்கவில்லை யுத்த நிறுத்த காலத்திலேயே கிடைத்துள்ளன.

குறிப்பிட்ட இரண்டு விமானங்களும் பகுதி பகுதிகளாக கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. ஒவ்வொரு வானூர்திகளும் தலா 1500 கிலோகிராம் வெடிபொருட்களை சுமந்துசெல்லக் கூடியன. இதன்மூலம் கொழும்பின் அரைவாசிப்பகுதிகளை அழித்துவிட முடியும்.

ஆயுதங்களை சேகரிப்பதற்காக அல்லாமல் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே போர்நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டது. ஆனால் விடுதலைப்புலிகள் இந்தகாலத்தில் விமானங்களைக் கொள்வனவு செய்தமையானது யுத்தநிறுத்தத்தை மீறும் செயலாகும். இதனை சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் மிகவும் அவதானித்து வருகின்றன.

இருந்தும் விடுதலைப்புலிகள் மீண்டும் விமானங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் மிகவும் உன்னிப்பாக ஈடுபட்டுவருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்து வருகின்றன. அதனை நாங்கள் உறுதிப்படுத்துவோமானால் விடுதலைப்புலிகள் தாம் யுத்தநிறுத்தத்தை மீறியதை சர்வதேச நாடுகள் முன்னிலையில் ஒப்புக்கொள்ள வேண்டும் அதற்காக எம்மீது குற்றங்களையும் பழிகளையும் சுமத்தக கூடாது என்றும் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தெரிவித்தார். (த-4)


54 ஆவது அகவை வாழ்த்து



உயர்திரு. க.தேவராஜா (வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக் கழகம்)

சீர் யாழ்ப்பாணம் திகழ் பல்கலைக்கழகம்
நேரில் வணிகத்துறைத் தலைவர் நெறிபேணி – பேரார்
கந்தையா சேய் தேவராஜா நாலு
புனைரம் பதும்சேர் பொழி

அருள் கல்விநிலையம் (A.T.C), கோண்டாவில் கல்வி நிலையம் (K.T.C),
கஜசங்கவி பிரிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்,
இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
இணுவில் பொது நூலக மூதவை உறுப்பினர்கள்
விக்னேஸ்வரா கல்வி நிலையம் (கொக்குவில்),
எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூரிட், டயமன்ட் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்,
K.R.S நிறுவனம் (கொழும்பு, யாழ்ப்பாணம்)
(சி-1161)



HATTON NATIONAL BANK LIMITED HNB

ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்

அடகுப் பொருட்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகுச் சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறு பக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகிறோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும், கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி க்டனின் காலாவதித் திகதியினை நீடித்துக்கொள்ளலாம்.

ஒருவருட காலத்துக்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் 19.03.2005 அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

(C/1160) முகாமையாளர்



